# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**ஆகஸ்ட் 2008 ஜீவியம் 14 மலர் 4**

*இம்மாத மலரில். . . .*

பொருளடக்கம்


| | *பக்கம்* |
|---|---|
| சும்மாயிருந்து சுகம் பெறுவது எக்காலம்? | 2 |
| லைப் டிவைன் | 8 |
| இம்மாதச் செய்தி | 18 |
| பிரார்த்தனையின் வலிமை | 19 |
| அஜெண்டா | 22 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 25 |
| லைப் டிவைன் - கருத்து | 29 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 35 |
| அன்பர் கடிதம் | 36 |
| முன்னேற்றம் தரக்கூடிய சாதனை | 37 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 40 |
| அன்றைய தோல்வி, இன்றைய வெற்றி | 46 |
| மலரும் மணமும் | 49 |
| சாவித்ரி | 57 |
| யோக சக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 59 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

பெரியது முடியவில்லை என்றால் சிறியதும் முடியாது. முடிந்தால் எல்லாம் முடியும். முடியாவிட்டால் எதுவும் முடியாது.

அதிர்ஷ்டம் வேண்டுமென்ற ஆர்வம் அதிகமானால் அதிர்ஷ்டம் அரை நிமிடம் காத்திருக்காது.

# சும்மாயிருந்து சுகம் பெறுவது எக்காலம்?

கர்மயோகி

இது ஞானியின் வாக்கு.

ஞானி வாழ்வை விட்டகன்று ஆன்ம ஞானம் தேடுகிறான்.

பக்தனுக்குப் பாட்டும், கூத்தும் அவசியம்.

ஹட யோகி, தந்திர யோகிக்கு ஆசனம், பிராணாயாமம், ஜபம் உண்டு.

ஞானிக்கு அதுவுமில்லை.

ஞானி ஞானத்தை அடைய மௌனத்தைத் தேடித் தவம் செய்கிறான்.

தவம் அவன் ஆன்மாவை அவனிடமிருந்து பிரிக்கிறது.

தவம் கடும் தவமாகும்.

உடலில் செல் புற்று ஏறும்.

சூடு போட்டாலும் தெரியாது.

தவம் சித்தித்தால் ஆன்மா விழிக்கும்; சித்திக்கும்.

சித்தித்த ஆன்மாவுக்கு அக்ஷர புருஷன் எனப் பெயர்.

அவன் சாட்சி புருஷன்.

பிரகிருதி எது செய்தாலும் சாட்சி புருஷன் கண்டிப்பதில்லை.

சும்மா இருப்பான்.

பார்த்துக்கொண்டிருப்பான்.

பார்ப்பதுடன் அனுமதி அளித்தபடியிருப்பான்.

தான் சிருஷ்டித்த உலகம் இயங்குவதை, அதன் இஷ்டப்படிச் செயல்படுவதைப் பார்த்துக்கொண்டு **சும்மாயிருப்பான்**.

அப்படிச் சும்மாயிருப்பது ஆண்டவன்.

அது அவனுக்குச் சுகம் தரும்.

ஞானி அந்நிலையை நாடிப் பெறுகிறான்.

அதைத் தேடும்பொழுது அவன் கூறும் சொல்லைத் தலைப்பாக எழுதினேன்.



இந்திய யோகப் பரம்பரையின் சிகரம் சும்மாயிருந்து சுகம் பெறுவது.

வாழ்விலுள்ள குடும்பஸ்தனுக்கு இது இல்லை.

**ஸ்ரீ அரவிந்தம் அடுத்த உயர்ந்த நிலைக்குப் போகிறது.**

**அங்கு ஞானிக்குள்ள சுகம் குடும்பஸ்தனுக்கும் உண்டு எனக் கூறுகிறது**.

இது யோகம் வாழ்வாவது.

சச்சிதானந்தம் என்பது சத்.

சத் உயர்ந்ததெனினும் பகுதி.

சத்தின் அடுத்த பகுதி அசத்.

சத்தும், அசத்தும் சேர்ந்ததே முழுமை.

ஞானி பிரம்மம் என்று கூறுவது சச்சிதானந்தம்.

ஸ்ரீ அரவிந்தம், பிரம்மம் என்று கூறுவது சத்தும், அசத்தும் சேர்ந்த முழுமை.

சத்தியஜீவியத்திற்கு இந்த முழுமையுண்டு.

இம்முழுமையைப் பெற்றவர் **வாழ்விலும் சும்மாயிருந்து சுகம் பெறலாம் என்பது ஸ்ரீ அரவிந்தம்**.

பெறுவது எங்ஙனம்?

நமக்கு வேண்டியது, வேண்டாதது என உண்டு.

இரண்டும் பகுதிகள்.

இரண்டும் சேர்ந்தது முழுமை.

வேண்டாததை விலக்காமல் சேர்த்தால் முழுமை எழும்.

சேர்க்கும்முன் வேண்டாததைத் திருவுருமாற்ற வேண்டும்.

கோபம், பொறாமை போன்றவை விலக்கப்பட வேண்டியவை.

அவற்றைத் திருவுருமாற்றினால் கோபம் சாந்தமாகும்; பொறாமை உதார குணமாகும்.

அப்படித் திருவுருமாற்றி அவற்றைச் சேர்த்தால் முழுமை உற்பத்தியாகும்.

நம் வேலைகளைக் கவனித்தால் சிறப்பாக நடக்கும்.

கவனிக்காவிட்டால், வேலை கெடும்.

**மனம் முழுமை பெற்றபின், வேலைகள் நாம் கவனிக்காமல் சிறப்பாக நடக்கும். அதுவே முழுமை பெற்றதற்கு அறிகுறி.**

SPIC முதலாளி சிதம்பரம் செட்டியார்.

அவர் மகன் தொழிலை நடத்துகிறான்.

பேரனும் தொழிலில் சேர்ந்துவிட்டான்.

செட்டியார் 80 ஆண்டிருந்தார்.

கடைசி நேரத்தில் படுக்கையானார்.

கடைசி மூச்சுள்ளவரை பேரனும், மகனும் எந்த விஷயத்தையும் அவர் அனுமதி பெற்றே செய்வார்கள்.

கடைசிவரை நிர்வாகம் அவரிடமேயிருந்தது.

இது பொதுவாக நாம் காண்பது.

பிடி பெரியவரிடம் உள்ளவரை நிர்வாகம் சிறப்பாக இருக்கும்.

இது பெரியது; ஆனால் முழுமையில்லை.

1915இல் மகாத்மா இந்தியா வந்தார்.

காங்கிரசில் சேர்ந்தார்.

1920இல் மகாத்மாவானார்.

காங்கிரஸின் தலைவரானார்.

10 ஆண்டுகட்குப் பிறகு தலைவர் பதவியைக் கைவிட்டார்.

காங்கிரஸை விட்டு ராஜினாமா செய்தார்.

உறுப்பினராகவுமில்லை.

**எந்தப் பதவியுமில்லாமல் சும்மாயிருந்தார்.**

ஆனால் நேருவும், பட்டேலும், மற்ற தலைவர்களும், மத்திய, மாநில மந்திரிகளும் காந்திஜியின் சொல்லுக்குக் கட்டுப்பட்டனர். அவரை மீறி எவரும் செயல்படமாட்டார்கள்.

மகாத்மா சும்மாயிருந்தாலும், பதவியைத் துறந்தாலும் மனத்தால் அரசியலில்



முழுமை பெற்றதால், முழு ஸ்தாபனமும் அவருக்குத் தானே வலியக் கட்டுப்பட்டது.

## முழுமை

சுபாவம் முழுமை பெறுவது, மனம் முழுமை பெறுவது, திறமை முழுமை பெறுவது, செயல் முழுமை பெறுவது என்றுண்டு.

✡ வேண்டாத சுபாவத்தை விலக்காமல் – விலக்கினால் பகுதியாவோம் – திருவுருமாற்றிச் சேர்த்தால் முழுமை பெறும்.

நம் கோபத்தைக் கிளப்புபவரை விலக்குவது எளிது.

அன்னை அதை விரும்பவில்லை.

அவர் நம் கோபத்தைப் பிரதிபலிப்பதால், விலக்க வேண்டியது அவரல்ல, நமது கோபம்.

நம்மால் அவரைக் கண்டு கோபப்பட முடியாவிட்டால், அவர் நம்மைவிட்டுத் தானே அகல்வார், அல்லது மாறிவிடுவார். அதுவே திருவுருமாற்றம்.

திருவுருமாற்றம் முழுமை தரும்.

✡ மனம் எதிரானதை விலக்கும்.

எதிரானதை ஏற்றால் நாம் திருவுருமாறுவோம்.

✡ காரியங்களை முடிப்பது திறமை.

அது உயர்ந்ததெனினும் பகுதி.

நம் காரியங்களை எவராலும் கெடுக்க முடியாத நிலை முழுமை.

✡ சுபாவத்தாலும், மனத்தாலும், திறமையாலும், செயலாலும் முழுமை பெற்றவர் சும்மாயிருந்து சுகம் பெறலாம்.

செயல் முழுமை பெறச் செயலை முடித்தால் போதாது.

நம் செயலை எவரும் கெடுக்க முடியாது என்பதும் போதாது.

நம் செயலை அனைவரும் ஏற்றுச் செய்வது செயல் முழுமை பெறுவதாகும்.

✡ நாம் செய்வதை உலகம் ஏற்பது செயல் முழுமை பெறுவதாகும்.

அப்படிச் செய்யும்பொழுது செயலுக்கு எதிரானவை திறனற்றுப் போகும்.

எதிரானது தானே அடங்கி, திருவுருமாறி, நம்முடன் சேர்ந்து நமக்கு முழுமையளிக்கும்.

நாம் ஏற்ற நல்ல பழக்கங்களை நம்முடன் உள்ளவர் அனைவரும் ஏற்றால் நம் செயல் முழுமை பெறும்.

சுபாவமும், மனமும், திறமையும், செயலும் ஒருவருக்கு முழுமை பெற்ற பின் அவர் செய்ய எதுவுமில்லை.

அவர் அகத்திலும், புறத்திலும் சும்மாயிருக்கலாம்.

அவர் சும்மாயிருந்தாலும் எல்லாக் காரியங்களும் செவ்வனே நடக்கும்.

✡ அக்ஷர பிரம்மம் சும்மா சாட்சியாகவிருந்து, பிரகிருதி உலகை இயக்க அனுமதியளிக்கிறது.

✡ க்ஷர, அக்ஷர பிரம்மங்கள் சேர்ந்தது முழுமையான பிரம்மம்.

✡ முழுமையான பிரம்மம் மௌனத்தின் பின்னுள்ள மௌனமானது.

மூன்றாம் நிலைக் காலத்தில் செயல்படுவது.

அதில் காலமும், கடந்ததும் இணைந்துள்ளன.

தீமை உயர்ந்த நல்லதாகத் திருவுருமாறி, நன்மையுடன் சேர்ந்து நன்மையை உயர்த்துகிறது (good becomes GOOD).

இருளை ஒளியாக்கி, ஒளியை ஆன்மீக ஒளியாக்குகிறது.

வலியை ஆனந்தமாக்கி, ஆனந்தத்தை ஜடத்தில் வெளிப்படுத்துகிறது.

✡ அசத் உயர்ந்து, அதனுடன் சத்தும் உயர்ந்து முழு பிரம்மமாகிறது.

✡ மாயையும், பிரகிருதியும் சக்திக்குள் நுழைந்து இணைகின்றன.



✡ பொய் மெய்யாகத் திருவுருமாறி, மெய்யைச் சத்தியமாக்குகிறது.

✡ பலஹீனம் பலமாகத் திருவுருமாறி, பலத்துடன் இணைந்து சக்தி ஆக்குகிறது.

✡ வெறுப்பு அன்பாக மாறி, அன்புக்குச் சுவை சேர்க்கிறது.

✡ விகாரம் அழகாக மாறி, அழகின் நிலையை ஆனந்தமாக்கும்.

✡ வருத்தம் சந்தோஷமாகி, சந்தோஷம் ஆனந்தமாகும்.

✡ மனித வாழ்வு அன்னை வாழ்வாக மாறும் பாதையிது.

- ❀ இதற்கு ஜடத்தில் சுத்தம் தேவை.
- ❀ சூழலில் அமைதி தேவை.
- ❀ மனத்தில் மௌனம் தேவை.

கடமையைச் செய்த கற்புக்கரசிக்கு ஞானமுண்டு.

திருவுருமாற்றத்தை ஏற்ற குடும்பஸ்தனுக்கு முழுமையுண்டு.

முழுமை பெற்றவர் சும்மாயிருக்கலாம்.

சும்மாயிருப்பது அக்ஷர பிரம்மத்திற்குச் சுகம்.

அது செயலிலிருந்து விலகியுள்ள சுகம்.

முழுப் பிரம்மம் செயலுள் நுழைந்து செயலாகி, செயலின் அடிப்படையாகி, செயல் நடக்கும்பொழுது தான் அசையாமல், ஆடாமல், பதட்டப்படாமல், பொறுமையாக, மௌனத்தின் பின் மௌனமாகச் செயலை நடத்தும்; உலகையியக்கும். அப்படி இயக்குவது ஆனந்தம்.

- ❀ அது ஸ்ரீ அரவிந்தம் கூறும் தத்துவம்.
- ❀ செயல்படும் முழுத் திறமையிருந்தும், திறமைக்குரிய அதிகாரம், பிடியிலிருந்து விலகி **சும்மாயிருப்பது ஸ்ரீ அரவிந்த முழுமை**. அது தரும் ஆனந்தம் பூலோகச் சுவர்க்க ஆனந்தம்.

❀❀❀

## லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVII. The Divine Soul

These are the aspects of one Existence. Page No.154
The first is based upon Self-knowledge. Para No.8
It can be understood in our human realisation.
The Upanishads give utterance to it.
It is Self in us becoming all existences.
The second is seeing all existences in the Self.
The third is described as seeing the Self in all existences.
The Self becoming all existences is the basis of our oneness with all.
The Self containing all existences is the basis of our oneness in difference.
The Self inhabiting all is the basis of our individuality in the universal.
Our mentality is defective.
It has a need of exclusive concentration.
It is compelled to dwell on any one of these aspects of self-knowledge.



## 17. தெய்வீக ஆன்மா

இவை ஒன்றான பிரபஞ்ச வாழ்வின் அம்சங்கள்.
முதலில் கூறியது சுயஞானத்தின் அடிப்படையில் ஏற்பட்டது.
மனித சித்தியால் அதைப் புரிந்துகொள்ள முடியும்.
உபநிஷதங்கள் அதைப் பற்றிப் பேசுகின்றன.
நம்முள் உள்ள பிரம்மம் எல்லாமாக மாறுவது அது.
அடுத்தது அனைத்தையும் பிரம்மத்துள் காண்பது.
மூன்றாவது பிரம்மத்தை அனைத்துள்ளும் காண்பது.
பிரம்மம் அனைத்துமாவது அனைத்துடனும் ஒருமை ஏற்படுவதற்கு அடிப்படை.
பிரம்மம் அனைத்தையும் தன்னுட்கொள்வது ஒருமையில் பன்மைக்கு அடிப்படை.
அனைத்துள்ளும் பிரம்மமிருப்பது பிரபஞ்சத்துள் தனித்தன்மை உருவாவதற்குரிய அடிப்படை.
நம் மனப்பான்மை தவறானது.
அதற்கு ஒரு விஷயத்தை மட்டும் கவனிக்க வேண்டிய அவசியம் உண்டு.
சுயஞானத்தின் இந்த அம்சங்களில் ஒன்றை மட்டும் கருதும் அவசியம் அதற்குண்டு.

That excludes others.
Our realisation is imperfect.
It is exclusive.
It moves us to bring in a human element of error into the very Truth itself.
It is a conflict and a mutual negation.
Really it is an all-comprehending unity.
The divine supramental being is informed by the essential character of the Supermind.
It is a comprehending oneness and infinite totality.
To it they present themselves as a triple realisation.
It is a triune realisation.

Let us say this soul takes its poise in the consciousness of the individual Divine. Page No.55 Para No.9
It lives and acts in distinct relation with the 'others'.

Still it will have its entire unity.
It will be in its foundation of consciousness.
All emerges out of that.
It will have in the background of that consciousness the extended and modified unity.
It is capable of returning to any of these and contemplating from its individuality.
In the Vedas all these poises are asserted of the gods.
In essence the gods are one existence.
The sages call them by different names.
In their action they are said to be all the other gods.
It is founded in and proceeds from the large Truth and Right.



அது, மற்றவற்றை விலக்கும்.
நாம் அறிவது குறையானது.
அது மட்டும் தனித்து நிற்பது.
சத்தியத்துள் நம் மனப்போக்கால் தவற்றை நுழைக்க அது வழி செய்யும்.

அது பிணக்கு. ஒன்று மற்றதை ரத்து செய்யும்.
உண்மையில் அது அனைத்தையும் தன்னுட்கொள்ளும் ஐக்கியம்.
தெய்வீக சத்தியஜீவன் சத்தியஜீவியத்தின் முக்கிய அம்சத்தை அறிவான்.

அது பூரணமான ஐக்கியம். அனந்தமான முழுமை.
தன்னை மூவகைச் சித்தியாக அது காட்டுகிறது.
உண்மையில் அது மூன்றில் ஒன்று - ஒன்றில் மூன்று.

இந்த ஆத்மா அந்த நிலையை எடுத்துக்கொண்டதாகக் கொள்ளலாம். அது ஜீவாத்மாவினுடையது.
மற்றவருடன் தனித்துக் குறிப்பிட்ட தொடர்புடன் அது வாழ்ந்து செயல்படுகிறது.
இருப்பினும் அதற்கு அந்த முழுமையான ஐக்கியம் உண்டு.
அதற்கு ஜீவியத்தின் அடிப்படையுண்டு.
அனைத்தும் அதனின்று புறப்பட்டு வெளிவரும்.
நீண்டு மாறுபடும் அதன் ஜீவியம் அதன்பின் திரையாக அமையும்.

எதற்கும் அதனால் திரும்ப வர முடியும்; வந்து தன் தனித்தன்மையிலிருந்து சிந்திக்க முடியும்.
வேதத்தில் தெய்வங்கட்கு இந்த எல்லா நிலைகளும் உண்டு.
சாரமாகக் கருதினால் எல்லாக் கடவுள்களுக்கும் ஒரே வாழ்வுண்டு.
ரிஷிகள் அவர்களைப் பல்வேறு பெயர்களால் குறிக்கின்றனர்.
செயலில் ஒவ்வொரு தெய்வமும் மற்ற எல்லாத் தெய்வமுமாகும்.
பரந்த சத்தியம், உண்மையின் அடிப்படையில் அது எழுந்தது.

So, Agni is said to be all the other gods.
He is the One that becomes all.
At the same time he is said to contain all the gods in himself as a nave of a wheel contains the spokes.
He is the One that contains all.
And yet as Agni he is described as a separate deity.
He is one who helps all the others.
He exceeds them in force and knowledge
Yet he is inferior to them in cosmic position.
He is employed by them as a messenger, priest and worker.

He is the creator of the world and father.
He is yet the son born of our works.
He is the original and manifested Self or Divine, the One that inhabits all.

God is the supreme Self of the divine soul. Page No.155
The divine soul has relations with God. Para No.10
It has relations with its other selves in other forms.

It has comprehensive self-knowledge.
It will determine all these relations.
These relations will be relations of being.
They will be relations of consciousness and knowledge.
It will be of will, force, love and delight.
They are infinite in their potentiality of variation.
They need exclude no possible relations of soul with the soul.



அக்னி எல்லாத் தெய்வங்களுமாகும் என்கின்றனர்.
அக்னி பலவாக ஆகும் ஒன்றாகும்.
அதே சமயத்தில் எல்லாத் தெய்வங்களும் வண்டியின் ரூபத்தில் கட்டைகள் சந்திப்பது போல் அக்னியில் சந்திக்கிறார்கள்.
அனைத்துத் தெய்வங்களையும் தன்னுட்கொள்ளும் ‘ஒன்று’ அக்னி.
இருந்தாலும் அக்னியைத் தனித்த தெய்வமாக வர்ணிக்கின்றனர்.
அனைவருக்கும் உதவி செய்வது அக்னி.
அனைவரையும் சக்தியிலும், ஞானத்திலும் அக்னி மிஞ்சுகிறார்.
பிரபஞ்சத்தில் அக்னி அனைவரைவிடத் தாழ்ந்தவன்.
அவர்களால் வேலை செய்பவனாக, குருக்களாக, தூதுவனாக, அக்னி நடத்தப்படுகிறான்.
அக்னி உலகைச் சிருஷ்டித்தவர், பிதா.
இருந்தாலும் நம் செயலுக்குப் புத்திரனாகப் பிறந்தவர் அக்னி.
அக்னியே ஆதி, சிருஷ்டியில் வெளிப்படும் பிரம்மம் அல்லது இறைவன், அனைத்துள்ளும் உறையும் பரமன் ‘ஒன்று’.

தெய்வீக ஆன்மாவுக்கு இறைவன் உயர்ந்த பிரம்மம்.
தெய்வீக ஆன்மாவுக்கு இறைவனுடன் தொடர்புண்டு.
அதற்கு - தெய்வீக ஆன்மாவுக்கு - மற்ற ஆத்மாக்களுடன் தொடர்புண்டு. அவை மற்ற ரூபங்களைத் தாங்குபவை.
அதற்குப் பூரணமான சுய ஞானமுண்டு.
அது இத்தொடர்புகளை நிர்ணயிக்கும்.
இத்தொடர்புகள் ஜீவனுடன் உள்ள தொடர்புகளாகும்.
அவை ஜீவியத்தாலும், ஞானத்தாலும் ஏற்பட்ட தொடர்புகளாகும்.
அது உறுதி, சக்தி, அன்பு, ஆனந்தமயமானவை.
அவை தம் மாற்றத்திலும், வித்தாகும் தரத்திலும் அனந்தமானவை.
ஓர் ஆன்மாவுக்கும் அடுத்த ஆன்மாவுக்கும் உள்ள எந்தத் தொடர்பும் அதற்கு விலக்கல்ல.

Only that the relation must be compatible with the basic unity.

It must preserve the inalienable sense of unity.
The sense of unity will be there in spite of every phenomenon of difference.
Thus the divine soul has its relations of enjoyment.
It will have the delight of all its own experience in itself.

It will have the delight of all its experience of relation with others as a communion with other selves.
They are created for a varied play in the universe.
The other selves have the delight of their experiences.
(They are indeed the experience of itself).
It will enjoy them as if they were its own.
All this capacity it will have.
It will be aware of its own experiences.
It will be aware of its relationship with others and of the experiences of others.
It will be aware of its relationship with itself.
It will be the Ananda of the One or all the joy.
The One is the supreme Self.
It is its own self.
It is differentiated by the separate habitation of all these forms.
It is all comprehended in its own being.
But still one in difference.
This unity is the basis of all these experiences.
It will be free from the discord of our divided consciousness.
It is divided by ignorance and separate egoism.



ஒரே நிபந்தனை, அத்தொடர்பு அடிப்படை ஐக்கியத்திற்கு ஒத்துவரக் கூடியதாக இருக்க வேண்டும்.
அதனின்று விலக இயலாத ஐக்கியத்தைப் பெற்றதாக இருக்க வேண்டும்.
தோற்றத்தின் மாறுபாடுகளை மீறி ஐக்கியத்தை உணரும் நிலையுண்டு.

அவ்வகையாக தெய்வீக ஆன்மா தன் உறவுகளை அனுபவிக்கிறது.
எல்லா ஆனந்தமும் உள்ளன. அவை தெய்வீக ஆன்மாவின் சொந்த அனுபவங்களாகும்.
மற்ற ஆன்மாக்களுடன் உள்ள தொடர்பை அவருடன் ஐக்கியமாகி அனுபவித்துத் தன் சொந்த ஆனந்தமாக உணரும்.
பிரபஞ்சத்தின் மாறிவரும் லீலைக்காக அவை சிருஷ்டிக்கப்பட்டன.
மற்ற ஆத்மாக்கள் அவர்களுடைய அனுபவத்தை ஆனந்தமாக உணர்கின்றன.
(அவை அனுபவங்களேயாகும்)
அவை அவர்களுடைய சொந்த அனுபவம் போல் அனுபவிக்கப்படும்.
இந்த எல்லாத் திறமைகளும் அவற்றிற்குண்டு.
அவற்றிற்கு அவர்களின் சொந்த அனுபவம் தெரியும்.
பிறருடைய உறவும், அனுபவமும் அவர் அறிவார்.
பிறர் உறவையும் அறிவார்.
அது பரமாத்மாவின் ஆனந்தம். அல்லது அது முழு ஆனந்தம்.
‘ஒன்று’ என்பது பரமாத்மா, உயர்ந்த பிரம்மம்.
அது அதனுடைய பிரம்மம்.
மற்ற எல்லா ரூபங்களின் தனித்த இடத்தினின்று அது பிரிக்கப்பட்டது.
அதன் ஜீவனில் அது புரியும்.
இருப்பினும் மாற்றத்திலும் ஒருமையுடையது.
இந்த ஐக்கியம் எல்லா அனுபவங்கட்கும் அடிப்படை.
பகுதியான நம் ஜீவியம் அனுபவிக்கும் பிணக்கு அதற்கிருக்காது.
அஞ்ஞானமும், பிரிவினையும் அதைப் பிரிக்கும்.

All these selves and their relations will play consciously into each other's hands.

They will part and melt into each other as the numberless notes of an eternal harmony.

This rule will apply to other things also.

*Contd....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

உயர்ந்த நிலையை அடைந்தபின்னும், நம் பழைய பழக்கம் பின்னணியில் இருப்பதைக் காணலாம்.

***நிலை உயர்ந்தாலும், பழக்கம் பழையதுவே.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஒரு திட்டத்தை அதற்குரிய நிலையில்தான் ஆரம்பிக்க முடியும். வேறு ஒரு நிலையில் நிச்சயமாக அதை ஆரம்பிக்க முடியாது. (eg.) உணர்ச்சிக்குரிய சேவையை மனத்திற்குரிய திட்டத்தால் ஆரம்பிக்க முடியாது. ஆன்மீக தியானத்தைச் சிந்தனையால் செய்ய முடியாது. யோகம் ஆன்மீகமானது. அதைச் சமர்ப்பணத்தாலோ, மனதை ஒரு நிலைப் படுத்துவதாலோ ஆரம்பிக்கலாம். விவாதத்தாலோ, படிப்பாலோ, பூஜையாலோ யோகத்தை ஆரம்பிக்க முடியாது.

***விஷயம் முடியுமிடத்தில் வேலையை ஆரம்பிக்க வேண்டும்.***



இந்த எல்லா ஆத்மாக்களும் அவற்றின் உறவுகளும் ஒன்றுடன் மற்றவை பின்னிக் கொள்ளும்.

கணக்கற்ற சொர்க்கலோக இசையின் ஸ்வரம்போல் அவை ஒன்றில் மற்றவை கரையும்.

இந்தச் சட்டம் மற்றவற்றிற்கும் பொருந்தும்.

**தொடரும்.....**

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

ஐந்தாண்டுத் திட்டங்களை இராஜாஜியால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குரிய (strategy) சூட்சுமத்தை நேருவால் கண்டுகொள்ள முடியவில்லை.

அது அவர்களுடைய அறிவின் குறையல்ல. சுயமாகச் சிந்திக்க முடியாதவர் எனவும் கொள்ள முடியாது. அவர்களுடைய சிந்தனையாற்றல் அவர்கள் வளர்ந்த சமுதாயத்தால் நிர்ணயிக்கப்பட்டது என்றே பொருள்.

தான் பிறந்த சமுதாயத்தைத் தாண்டி வருவது அன்னையை ஏற்றுக்கொள்வதற்கு அவசியம். அத்துடன் தான் பிறந்துள்ள பரிணாம நிலையையும் (evolutionary plane) கடந்து வருதல் அவசியம். குறைந்தபட்சம் சிந்தனையிலாவது அதைத் தாண்டி வர வேண்டும்.

***சமூக சிந்தனைக்கு முடிவுண்டு; சிந்தனைக்கு முடிவில்லை.***

## இம்மாதச் செய்தி

**அகம் சுருங்கினால்**

**புறம் கெடும்.**



## பிரார்த்தனையின் வலிமை

N. அசோகன்

பிரார்த்தனை என்பது நம் வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சம் ஆகும். தேவை எழும்பொழுது அனைவரும் பிரார்த்தனை செய்கின்றனர். பிரார்த்தனையிலேயே மூன்று வகைகள் இருக்கின்றன. பலனுக்காகப் பிரார்த்தனை செய்வது இவற்றில் சாதாரண ஒன்றாகும். ஸ்ரீ அரவிந்தருடைய 'சாவித்திரி' காவியத்தில் 'ஒரு பிரார்த்தனை மற்றும் வல்லமை மிகுந்த செயல் ஆகியவை இறைவனை அடையும்பொழுது, அற்புதங்கள் சாதாரண நிகழ்ச்சிகள் ஆகின்றன' என்றொரு வரி இருக்கிறது. எல்லா உண்மையான பிரார்த்தனைகளும் தவறாமல் நிறைவேற்றப்படுகின்றன. அதிலும் ஆபத்தான நேரங்களில் நம்முடைய ஜீவனின் ஆழத்திலிருந்து எழும்புகின்ற பிரார்த்தனைகள் ஒருபோதும் தவறுவதில்லை. டாக்டர் ஒரு நோயாளியைக் கைவிடும்பொழுதும், ஒரு கம்பெனி தயாரித்துள்ள பொருளுக்கு மார்க்கெட்டில் டிமாண்ட் (demand) குறையும்பொழுதும் இம்மாதிரி இக்கட்டான நேரம் எழுகிறது. திடீரென விபத்துக்கு உள்ளாகும் சூழ்நிலை உருவாகும்பொழுதும் இம்மாதிரி நிலைமை உருவாகிறது. இம்மாதிரியான நேரங்களில் இறைவனிடம் பிரார்த்தனை செய்து அவருடைய கருணையால் காப்பாற்றப்பட்டதாக நாம் சொல்லிக்கொள்கிறோம். இறைவன் என்பது உள்ளுறையும் ஆன்மாவைக் குறிக்கும்.

ஒரு சேவை ஸ்தாபனத்தினுடைய கிராமியத் திட்டம் ஒன்று அந்த ஸ்தாபனத்தில் பணிபுரியும் ஒரு சேவை அன்பரின் கீழ் இயங்கிக் கொண்டிருந்தது. அவ்வன்பரின் கீழ் ஒரு மேனேஜரும் பணியாற்றிக் கொண்டிருந்தார். சேவை ஸ்தாபனமாக இருந்ததால் எல்லோரும் ஊதியத்திற்காகப் பணியாற்றாமல் சேவை அடிப்படையில் பணியாற்றிக் கொண்டிருந்தனர். அச்சமயம் அடித்த ஒரு புயலால் அங்கு வேலை செய்துகொண்டிருந்த 80க்கும் மேற்பட்ட ஊழியர்களுடைய உயிருக்கும்

ஆபத்து வந்தது. ஆனால் அவர்களுடைய ஆழ்ந்த பிரார்த்தனையால் அந்த ஆபத்து விலகியது. இருந்தாலும் திட்டம் பெரும் நாசம் அடைந்து, அங்கிருந்த கொட்டகைகள் மற்றும் எல்லா உபகரணங்களும் கடும் சேதம் அடைந்துவிட்டன. சேவை அன்பரும், மேனேஜரும் இடத்தைப் பார்வையிட்டார்கள். தாம் ஆசையாய்ப் போட்ட திட்டம் இப்படிப் பாழாகிவிட்டதே என்று மேனேஜருக்கு ஆத்திரம் வந்தது. அங்கிருந்தவர்களின் பரிதாபமான நிலையைக் கண்டு சேவை அன்பருக்கு மனம் கலங்கியது. அவ்விடத்தைச் சீரமைக்கும் பணிக்கு உடனடியாக ரூ.5,000 தேவைப்பட்டது. இரண்டு லட்சம் முதலீடு செய்திருந்த சேவை அன்பர் செயலிழந்த நிலையில் இருந்தார். 1972இல் ரூ.5,000 என்பது அங்கு 10 ஏக்கர் நிலத்தின் விலைக்குச் சமானமாகும். அந்நேரம் வரையிலும் உள்ளிருக்கும் ஆன்மாவின் சக்தியை வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொண்ட மேனேஜரும் அதே நிலையில்தான் இருந்தார். அவர் ஏற்றுக்கொண்டிருந்த ஆன்மீக இயக்கத்தில் சரணாகதிதான் முக்கியமான கொள்கையாக இருந்தது. அந்தச் சரணாகதி முறையை இப்பொழுது செயல்படுத்தத் துணிந்தார். வழிபாட்டு மையத்திற்கு உடனே சென்று பிரார்த்தனை செய்துவிட்டு வெளியில் வரும்பொழுது கண்ணில் தென்படும் முதல் அன்பரிடம் நிதி உதவி கேட்பது என்று முடிவு செய்தார். வழிபாட்டு மையத்திற்குப் போகும் வழியிலேயே ஒரு முதிய அன்பர் இவரைச் சந்தித்து தம் வீட்டிற்கு வரும்படி வற்புறுத்தினார். இந்த முதியவரிடம் தான் திட்டமிட்டபடி ரூ.5,000 நிதியுதவி கேட்கலாம் என்று மேனேஜர் துணிந்தார். கடனாகக் கேட்டதை முதியவர் அன்பளிப்பாக வழங்கினார்.

ஒரு சிறு தொழிலதிபர் மிகுந்த சிரமத்தில் மூழ்கியிருந்தார். நிறைய பில்களுக்குப் பணம் கட்ட வேண்டியிருந்தது. ஏதேனும் ஒரு சிறு வருமானம் வந்தால், அதைப் போன்ற ஐந்து மடங்கு செலவு காத்திருப்பதைக் கண்டார். கடன்காரர்களின் தொந்தரவு தாங்க முடியாமல் போய்விட்டது. சிலர் திட்டவும் செய்தார்கள். மற்றும் சிலர் அவருடைய வீட்டில் ஜன்னல் கதவுகளையும் உடைத்தார்கள். அவருக்குத் தெரிந்த எல்லாத் தெய்வங்களிடமும் அவர் செய்த



பிரார்த்தனைகள் எல்லாம் பலிக்காமல் போய்விட்டன. அதிர்ஷ்டவசமாக ஆன்மாவின் சக்தியைப் பற்றிக் கேள்விப்பட்டு, அதனுடைய சக்தியைத் தனக்குச் செயல்படும்படி வேண்டிப் பிரார்த்தனை செய்தார். மூன்று வாரங்கள் நிம்மதியாகக் கழிந்தன. இருந்தாலும் மீண்டும் தொந்தரவு ஆரம்பித்தது. ஆனால் அவர் இப்பொழுது அமைதியாக இருந்தார். திடீரென்று ஒரு வங்கி மேனேஜர் தானாக அவரை அணுகி மூன்று லட்சம் நிதியுதவி வழங்கினார். அது அவருக்குப் பேருதவியாக அந்நேரம் இருந்தது. மும்பையிலுள்ள ஒரு பெரிய நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த பழைய நண்பர் ஒருவர் ரூ.5 கோடி மதிப்புள்ள ஒரு மின்நிலையத்திற்கு டெண்டர் சமர்ப்பிக்கும்படி இவரைக் கேட்டார்.

ஆன்மா நம் அழைப்பிற்கு பதிலளிக்கத் தவறுவதில்லை. ஒரு நொடிப்பொழுதிலும் அது பதில் தரலாம். அல்லது நிதானமாக அது முடிவு செய்த நேரத்திலும் பதில் தரலாம். எப்படி இருந்தாலும் பதில் என்பது கண்டிப்பாக உண்டு.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

விஸ்வாசம், துரோகம் என்பவை நம்மை ஒத்தவருடன் உள்ள தொடர்புகளாகும். உன் தகுதிக்குக் கீழ்ப்பட்டவரால் உனக்குத் துரோகம் செய்ய முடியாது. அவர்களால் உன்னிடம் விஸ்வாசமாகவுமிருக்க முடியாது.

நம் வீட்டு மாடு நம் பயிரை மேய்வது துரோகமல்ல. அதன் இயல்போடு மாடு செயல்படுகிறது என்று அர்த்தம்.

***நம்மையொத்தவரே துரோகம் செய்ய முடியும்.***

## Mother wants Nixon to be removed.
## நிக்ஸனை அன்னை பதவியினின்று நீக்க விரும்பினார்.

- *அஜெண்டா*

அன்னை எவரையும் தம் ஸ்தாபனத்தினின்று நீக்க முயலவில்லை. தனக்கே பாதகம் செய்தவரையும் விலக்கவில்லை. இதுவே அவர் சட்டம். அதற்கு எதிரான சட்டமும் உண்மை. நிக்ஸன் போக வேண்டும் என்று கூறியதுபோல் மொரார்ஜி தேசாயும் போக வேண்டும் என்றார். இருவரும் விலக்கப்பட்டனர்.

நிக்ஸன் செனட்டால் குற்றம் சாட்டப்பட்டு விலக்கப்பட்டார்.

மொரார்ஜி நிதிமந்திரியாக இருந்தபொழுது நிதி இலாக்காவை அவரிடமிருந்து எடுத்துவிட்டதால் அவர் ராஜினாமா செய்தார். பிறகு எமர்ஜென்ஸி போனபின் பிரதமராக வந்து, 2½ ஆண்டிருந்து, ஆதரவையிழந்து, பதவியினின்று விலகினார். அந்த வருஷங்களிலும் மொரார்ஜி தமக்குப் பிடிக்காத ‘‘பாங்கு தேசியமயமானதை’’ ரத்து செய்ய முயலவில்லை.

✡ அன்னை தண்டிப்பதில்லை என்றால் இதெல்லாம் எப்படி என்பது கேள்வி.

✡ வாழ்வில் வேலைக்குத் தடையானவருக்குத் தண்டனை வரும்.
அன்னை அந்தத் தண்டனையைத் தருவதில்லை.
அது உலகிலில்லாத சுதந்திரத்தை அன்னை தருவதாகும்.
மனிதன் அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி வேலைக்குத் தடையாக இருக்கிறான்.
அதையும் சில சமயம் அன்னை அனுமதிப்பார்.
பல சமயம் அவனை விலக்குவார்.



✡ தறுதலை அன்னை ஸ்தாபனத்தில் நியமிக்கப்பட்டார்.
பொறுப்பில்லாதவர், அவர் சோம்பேறியாயும் இருந்தார்.
ஒரு வருஷ காலத்தில் ஸ்தாபனத்தை மூடும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்.
அதற்கு வெட்கப்படவில்லை. ‘‘ஸ்தாபனத்தை மூடிவிடுவோம்’’ என்று அன்பரிடம் கூறினார்.
ஸ்தாபனத்தை மூட வேண்டாம், தறுதலையை அனுப்பிவிட்டால் போதும் என அன்பர் அறிவார்.
அன்பர் தறுதலையை நீக்கவில்லை.
அவரை அனுப்பிவிட்டுச் சமர்ப்பணத்தை அன்பர் மேற்கொண்டார்.
நிலைமை மூன்று நாளில் மாறியது.
ஸ்தாபனம் தொடர்ந்தது.
தறுதலையின் சொந்தச் சந்தர்ப்பங்கள் மாறின.
ஸ்தாபனத்தை விட்டுப் போவது நல்லது என அவருக்கே தோன்றியது.
அவரே போய்விட்டார்.
நாம் உள்ளே மாறினால் தொந்தரவு கொடுப்பவர் விலகுவார் என்பது அன்னை சட்டம்.

✡ அன்னை அன்பர் என்ற பெயரில் சம்பிரதாயங்களைத் தீவிரமாக ஒருவர் பின்பற்றினார்.
அதனால் பெரும் ஆபத்து எழுந்தது.
ஸ்தாபனத் தலைவர் சம்பிரதாயங்களை விட வேண்டும் என வற்புறுத்தவில்லை.
மேலும் தீவிரமாக அவர் சம்பிரதாயங்களைப் பிடிவாதமாகப் பின்பற்றினார்.
அதனால் ஸ்தாபனத்திலுள்ளவர்க்கு உயிருக்கு ஆபத்து வருகிறது.
அதை ஏழு முறை பார்த்தும் அவர் சம்பிரதாயங்களை விடவில்லை.
அவர் செய்வது பிறரைப் பாதிக்கும்வரை சட்டம் பேசுவார்கள்.
செய்பவரையே பாதித்தால் உடனே மாறுவார்.
ஆபத்து அதிகமானதால் அவரைத் தலைவர் விலக்கினார்.

சம்பிரதாயம் கடுமையானது.
அவர் விலகிய பின்னும் ஸ்தாபனம் பாதிக்கப்பட்டது.
செய்தவரையே பாதிக்க ஆரம்பித்தது.
அவர் ஸ்தாபனத்தைப் பாதித்தது.
மனிதன் சுயநலம்.
நாம் அவனை ஏற்றால், அவன் சுயநலம் நம்மைப் பாதிக்கும்.
நம்மை மட்டும் பாதிக்கும்வரை அவன் சுயநலமான காரியத்தை விடமாட்டான்.
ரூ.64,000 தர வேண்டியவனுக்கு அது நினைவேயில்லை.
கொடுத்தவர் கேட்கவில்லை.
நாள் கழித்து 64 இலட்சம் அவன் பலருக்கு அநியாயமாகத் தர வேண்டியதாயிற்று.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நட்பு - குடும்பம் - வாழ்வு - கூட்டு - மனிதனுடைய சிறப்பு (personality).

கூட்டாளியைவிடப் பணம் முக்கியம் என்று நினைத்தவுடன் கூட்டு முறிந்துபோகும்.

ஆதாயமான நினைவு நட்பைப் பொசுக்கும்.

சோகம் எழுந்தால், வாழ்வு நலியும்.

தயக்கம் ஏற்பட்டால் மனிதனுடைய சிறப்பு இறக்கும்.

அடுத்தவரை மனம் ஆழ்ந்து நாடினால், திருமணம் முடிகிறது.

***உறவில் உண்மை போனால் உறவு அழியும்.***



# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N. அசோகன்**

261. சோவியத் யூனியனில் அதிபராக இருந்த கோர்பச்சேவ் கம்யூனிஸ்ட் கட்சியைச் சீர்திருத்தம் செய்ய முயன்று இறுதியில் ஆட்சியிலிருந்தே அக்கட்சியை அகற்றினார். இப்படி உள்ளே இருந்துகொண்டே புரட்சியை நிகழ்த்திய அபூர்வ மனிதராகத் திகழ்கிறார்.

262. மகாத்மா காந்தியடிகள் சுதந்திரம் வந்தபொழுது காங்கிரஸ் கட்சி முன்னேற்றப் பணிகளுக்காகத் தன்னை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினார். ஆனால் காங்கிரஸ் கட்சி அப்படித் தன்னை மாற்றிக்கொள்ளவில்லை. அதன் விளைவாகக் கட்சி மிகவும் இறுகிப் போய் தேசத்தோடு தனக்கிருந்த ஒட்டுறவை இழந்தது. அதன் விளைவாக 1989ம் ஆண்டில் 40 வருட காலமாகத் தன் பிடியில் வைத்திருந்த ஆட்சியையே இழந்தது.

263. அனார்க்கிஸக் கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் குடிமக்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கக்கூடாதென்று பிரியப்படுகிறார்கள். ஆனால் இப்படி ஒரு கட்டுப்பாடில்லாத சுதந்திரத்தை இப்பொழுது மனிதனுக்கு வழங்க முடியாது. பூவுலக வாழ்க்கை சத்தியஜீவிய மயமாகும்பொழுதுதான் தவறுகள் நேரிடாமல் பூரண சுதந்திரத்தை அனுபவிக்க முடியும்.

264. சோவியத் யூனியனிலும், சைனாவிலும் கம்யூனிசக் கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் நல்ல ஒரு பொருளாதார முன்னேற்றம் வந்துள்ளது. ஆனால் சுதந்திரம் இல்லாத நிலையில் வருகின்ற பொருளாதார முன்னேற்றத்தைவிடச் சுதந்திரமான சூழ்நிலையில் பொருளாதார முன்னேற்றம் தாமதமாக வந்தாலும், மக்கள் இதைத்தான் விரும்புகிறார்கள்.

265. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியர்கள், இலங்கை அரசு மற்றும் LTTE, இந்தியா மற்றும் பாகிஸ்தான் என்று இவர்களுக்கிடையே உள்ள

பிரச்சினைகள் நெடுங்காலமாகத் தீராமல் இருந்துவருகின்றன. இவற்றிற்கு எல்லாம் நிரந்தரத் தீர்வு வேண்டுமென்றால் மனிதர்களுக்கிடையே உள்ள ஒற்றுமை உணர்வு அதிகரிக்க வேண்டும்.

266. ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக இங்கிலாந்து உலகமெங்கும் ஒரு சாம்ராஜ்யத்தை நிறுவி ஆண்டது. ஆனால் இப்பொழுது லண்டனில் ஆப்பிரிக்காவையும், ஆசியாவையும் சேர்ந்தவர்கள் நிறையக் காணப்படுகின்றனர். வெளிநாடுகளில் நிறுவிய சாம்ராஜ்யத்திற்கு இதைக் கர்மபலனாக நாம் எடுத்துக்கொள்ளலாம்.

267. ஐரோப்பாவில் நிகழ்ந்த இரண்டு உலகப் போர்களும் பெரும் சேதத்தை விளைவித்தன. ஆனால் இந்த உலகப் போர்களைத் தொடர்ந்து ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், ஐரோப்பிய தேசங்கள் நிறுவியிருந்த சாம்ராஜ்யங்கள் கலைக்கப்பட்டன. இந்த உலகப் போர்களே நிகழ்ந்து இருக்காவிட்டால் இந்தச் சாம்ராஜ்யங்கள் கலைக்கப்பட்டிருக்குமா என்பது சந்தேகத்திற்குரியது.

268. இந்தியாவும், அமெரிக்காவும், இரண்டுமே ஜனநாயகக் குடியரசு நாடுகளாக இருக்கும்பட்சத்தில் இரண்டும் நட்பு நாடுகளாக விளங்கி இருக்க வேண்டும். ஆனால் இந்தியா சோவியத் யூனியனை நாடிச் சென்றதை வைத்துப் பார்த்தால், இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையே நட்புறவுக்குப் பதிலாகப் போட்டி உறவு மேலோங்கி இருந்ததைக் காட்டுகிறது.

269. இந்தியாவின் ஆன்மா ஒன்று என்னும்பொழுது இந்தியாவும், பாகிஸ்தானும் பிரிந்திருப்பது இறைவனுக்கு ஏற்புடையதில்லை என்று தெரிகிறது. ஆகவே நெடுங்காலக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இந்தப் பிரிவினை நீங்கும் எனத் தெரிகிறது. இறைவன் எப்படி இந்தப் பிரிவினையை அகற்றுவார் என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

270. வியட்நாம் போரில் அமெரிக்கா தோல்வியைத் தழுவியது வெற்றி பெறுவதற்கு ராணுவ பலம் மட்டும் போதாது என்று காட்டுகிறது. மக்களுடைய ஆதரவு இல்லை என்றால், ராணுவமும் தோற்கும்.

271. பயங்கரவாதம் என்பது சமூக அநீதிகளை எதிர்ப்பதனுடைய அடையாளமாக நாம் கருத வேண்டும். இந்த அநீதிகள் அகற்றப்பட்டன என்றால் பயங்கரவாதம் தானாகவே மறைந்துவிடும்.



272. ஜப்பானிய நகரங்களின் மேல் இரண்டு அணுகுண்டுகளை வீசி அமெரிக்கா அணுகுண்டு யுகத்தைத் துவக்கி வைத்தது. அதே அமெரிக்கா தான் இப்பொழுது அணுகுண்டுத் தாக்குதலுக்கு பயந்து நடுங்கிகொண்டு இருக்கிறது. இதை நாம் கர்மபலனாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

273. ஆயுதங்களைக் குவித்து வைப்பதைப்பற்றி அன்னை எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆயுதங்களே போரைத் தூண்டிவிடும் என்கிறார். ஆகவே அணு ஆயுதக் குவியலை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

274. ஆரோவில் இருக்கும் வரை மூன்றாம் உலகப் போர் நிகழாது என்று அன்னை கூறியிருக்கிறார். தென்னிந்தியாவின் மூலையில் உள்ள ஒரு சிறிய குடியிருப்பு மூன்றாம் உலகப் போரைத் தடுக்கும் என்பது பல பேருக்கு நம்பும்படியான விஷயமாக இல்லாமல் இருக்கலாம். ஆரோவில் தன்னுடைய வேலையைச் சூட்சும நிலையில் செய்வதால் இந்த உண்மை நம் கண்ணிற்குத் தெரிவதில்லை.

275. செவ்விந்தியர்களும், கருப்பர்களும் வேலை செய்யாமல் அரசாங்க உதவித் தொகையில் காலம் கழித்துக்கொண்டிருப்பது இவர்களை அமெரிக்கா துன்புறுத்தியதற்கு உண்டான கர்மபலனாக நாம் எடுத்துக் கொள்ளலாம்.

276. தென்னிந்தியாவில் அந்தண வகுப்பைச் சேர்ந்தவர்கள் அந்தணர் அல்லாதோர் மீது பழங்காலத்தில் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். ஆனால் இப்பொழுது அந்தணர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத்தில் வேலை கிடைப்பதே கடினமாகிவிட்டது. இதையும் நாம் கர்மபலனாக எடுத்துக்கொள்ளலாம்.

277. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாட்டைத் தாலிபான் பிரிவினர் கைப்பற்றியபொழுது அதை ஆதரித்தது. ஆனால் ஆப்கானிஸ்தான் நாட்டில் தாலிபான் ஆட்சி கவிழ்ந்தபொழுது அதே தாலிபான் பிரிவினர் பாகிஸ்தானிற்குள் ஊடுருவ ஆரம்பித்துவிட்டார்கள். தான் விதைத்ததைத் தானே அறுவடை செய்கின்ற கர்மபலனைப் பாகிஸ்தான் இப்பொழுது அனுபவிக்கிறது.

278. இந்தியாவில் மாநிலங்களுக்கிடையே நிகழ்ந்துகொண்டிருக்கிற நதிநீர்ப்

பங்கீடு பிரச்சனைகள் தேசிய உணர்வு குன்றி, குறுகிய மனப்பான்மை தலையெடுத்துள்ளதைக் காட்டுகின்றன.

279. கங்கை நதியையும், காவிரி நதியையும் இணைத்தோம் என்றால், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்கு அது ஒரு பெரிய உந்துதலாக இருக்கும். ஆனால் அத்தகைய ஒரு முயற்சி இதுவரை எடுக்கப்படாமல் இருப்பது இந்திய அரசாங்கத்திடம் மன உறுதி இல்லை என்பதைக் காட்டுகிறது.

280. 1980ம் ஆண்டு அளவில் ஓ.பி.இ.சி. தேசங்கள் பெட்ரோல் விலையை 4 மடங்கு உயர்த்தியபொழுது உலகமே அதிர்ச்சி அடைந்தது. இப்படி ஒரு விலை உயர்வு நடந்திருக்காவிட்டால் சுற்றுச்சூழல் இன்னும் வேகமாக மாசுபட்டிருக்கும்.

தொடரும்.....

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

நாம் பிறரைப் பற்றிச் சொல்லும் குறைகள் அனைத்தும் ஏதோ ஓர் அளவில் நம்முள் வேறு நிலையில் உற்பத்தியாவதாகும்.

***வாயால் சொல்லும் குறை மனத்திலுள்ள குறையாகும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

மனம் முழுவதும் சமர்ப்பணத்திற்குத் தயாராகும்வரை ஒரு தனிச் செயலைப் பூரணமாகச் சமர்ப்பணம் செய்ய முடியாது.

***சமர்ப்பணம் பூரணத்திற்குக் காத்திருக்கும்.***



## "Life Divine" - கருத்து

**பௌத்த மதத்திலும், பரம்பரையிலும், தற்கால கொள்கைப்படியும் ஆத்மா என்பது அழியாததில்லை. அது மனிதன் உற்பத்தி செய்தது.**

**(*The Life Divine - P.746*)**

நம்பிக்கை பலவிதம். தெய்வ நம்பிக்கை, மனத்தின் நம்பிக்கை, மூட நம்பிக்கை எனப் பலவகையுண்டு. பகவத் கீதை தெய்வ நம்பிக்கை ஆத்மா மீதுள்ள நம்பிக்கையானால், ஆத்மா எதை நம்பினாலும், மனிதன் அதைச் சாதிப்பான் என்கிறது. சுமார் 150 ஆண்டுகளாக ஐரோப்பாவில் Mind, Matter மனம், உடலில் எது சக்தி வாய்ந்தது என்ற ஒரு கொள்கை விவாதிக்கப்படுகிறது. அதன் விளைவாக மனம் ஒரு விஷயத்தை நம்பினால் அது நம்புபவர்க்குப் பலிக்கும் என ஆயிரம் நிகழ்ச்சிகள் விவாதிக்கப்படுகின்றன.

பௌத்த மதம் நிர்வாணக் கொள்கையை முக்கியமாகக் கொண்டது. அகந்தை, ஆணவம், அகங்காரம் (ego) என்பது நம் பிரச்சினைகட்குக் காரணம் என்பது அவர்கள் அனுபவம். பௌத்த மதம், ஜைன மதம் - நாம் சமணர் என்போம் - அகந்தை வளர ஆரம்பத்திலிருந்தே இடம் தரமாட்டார்கள். ரோட்டில் போகும்பொழுது ஒருவர் தம் மீது இடித்துவிட்டால் அதுவும் தம் குறையெனக் கொள்வார்கள். அவனிடம் மன்னிப்புக் கேட்பார்கள். அவர்கள் பேச்சில் முனைப்பிருக்காது. கைகளைத் தொட்டால் மிருதுவாக இருக்கும். பொதுவாக பௌத்த பிக்ஷுக்கள் கை மிருதுவாக இருக்கும். வேலை செய்த கை முரடாக இருக்கும். மனம் 'தான்' என்பதைப் பாராட்டினால் அந்த முனைப்பு கண்களில் தெரியும், நடையில் வெளிப்படும், உடலிலும்

வெளிப்படும். பௌத்த மதத்தில், 'ஆணவம் என்பது நாமே ஏற்படுத்தியது. நம் முயற்சியால் அதைக் கரைக்கலாம்' என முடிவு செய்து, தவ முயற்சியால் அகங்காரத்தைக் கரைத்துள்ளனர். அதனால் அவர்கள் நடைமுறை அமைதியானதாகும். அது பெருவெற்றி. பௌத்த மதம் அத்துடன் நிற்காமல், 'ஆத்மா என்பது நாம் ஏற்படுத்தியது. அதையும் தவ முயற்சியால் கரைக்கலாம்' என்றனர். அவர்கள் ஆத்மாவை நம்புவதில்லை. ஆத்மாவுக்கு அமரத்துவம் உண்டு எனவும் நம்புவதில்லை.

பகவான் ஸ்ரீ அரவிந்தர் தன் கொள்கை ஒன்றை விளக்கச் சில முறைகளைக் கையாள்கிறார். அவை:

1) தர்க்கரீதியாகத் தன் கொள்கையைக் கூறுவது.
2) பொதுவாக எழும் ஆட்சேபணைகளைக் கூறிப் பதில் சொல்வது.
3) எதிரித் தரப்பு என ஒன்றிருந்தால், அவர்கள் எழுப்பும் கேள்விகட்குப் பதில் கூறுவது.
4) வாழ்க்கையிலில்லை என்பவற்றை எடுத்துக் கூறுவது.
5) ஏதோ ஓரிடத்தில் உதாரணம் மூலம் விளக்குவது.
6) எப்படி இந்தத் தவறான எண்ணம் எதிரிக்கு உதயமாயிற்று எனக் கூறுவது.

ஆத்மா, அகந்தை என்பவற்றுள் ஆத்மா பிரம்மத்தின் பிரதிநிதி. அதை இந்தியப் பரம்பரை ஆத்மா, புருஷா, ஈஸ்வரா என்ற மூன்று நிலைகளில் விவரிக்கிறது. காலம் ஆத்மாவின் அகம்; இடம், புறம். சச்சிதானந்தம் சத்தியஜீவியமாகி, சத்தியஜீவியம் இரண்டாகப் பிரிந்து, மனம் உற்பத்தியாகிறது.

✡ மனம் அஞ்ஞானத்தால் அகந்தையை உருவாக்கியது.

✡ மனம் அஞ்ஞானத்தை இழந்தால், அகந்தைக்கு ஆதரவு குறையும்.

✡ மனம் அகந்தையை உற்பத்தி செய்து, அஞ்ஞானத்தால் அதை வளர்த்தது. அதனால் மனம் அகந்தையின் வளர்ச்சியைத் தடுக்க முடியும்.



மனம் தன் ஆதியையடைந்து அகந்தையை உற்பத்தி செய்ததை அறிந்து, மாற்றினால் அகந்தை கரையும்.

**மனம் அகந்தையை உற்பத்தி செய்ததால், மனத்தால் அகந்தையைக் கரைக்க முடியும்.**

✡ இந்த அனுபவம் தவறாக பௌத்தர்களை மனம் அகந்தையைக் கரைத்தது போல், ஆத்மாவையும் கரைக்க முடியும் என்று நினைக்கச் செய்தது.

✡ ஆத்மா மனத்தை உற்பத்தி செய்தது. மனம் ஆத்மாவை உற்பத்தி செய்யவில்லை என்பதைப் பௌத்தம் அறியவில்லை.

✡ தான் உற்பத்தியாகும் முன் உற்பத்தியான ஆத்மாவை மனத்தால் கரைக்க முடியாது என பகவான் பௌத்தர்கட்கு விளக்கம் தருகிறார்.

## இந்திய மரபு

இந்திய மரபில் தவம், யோகம் என்பவை மோட்சம் பெற உதவும் மார்க்கங்கள். அன்றிலிருந்து இன்றுவரை யோகம் எந்த ஸ்தாபனத்திற்கும் கட்டுப்பட்டதில்லை. மேல்நாடுகளில் சர்ச்சுக்கு வெளியே ஒருவர் தெய்வ வழிபாட்டை மேற்கொள்வது சிரமம். அனுமதி இருக்காது. சில சமயம் ஜெயிலுக்குப் போக வேண்டும். உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம். அதுவும் மார்ட்டின் லூதருக்கு முன் சர்ச்சின் ஆட்சி பூரணம்; தெய்வ வழிபாடனைத்தும் சர்ச் கண்ட்ரோலுக்குள் வரும். அதையும் மீறி மலையில், குகையில் சாதுக்கள் இருந்தனர். நம் நாட்டில் தவம் செய்ய எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. வேதம் முதல் யோகங்கள் பல வகையாக எழுந்தன. *இந்த ஆன்மீகச் சுதந்திரம், மத சுதந்திரம் எந்த நாட்டிலும் இன்றுவரை இல்லை.* அதனால் ஏற்பட்ட யோகங்கள் பல. அவற்றைப் பயிலுவதில் அனைவருக்கும் சுதந்திரம் உண்டு என்பதால் அநேகமாக ஒவ்வொரு முனிவரும் தனக்கேற்ப யோகத்தை மாற்றி அமைத்துள்ளனர். ராஜ யோகம், ஞான யோகம், பக்தி யோகம், கர்ம யோகம், ஹட யோகம், லய யோகம், மந்திர யோகம், தந்திர யோகம் முக்கியமானவை. இவற்றின் பிரிவுகள் ஆயிரம். பொதுவாகச் சொன்னால்,

1) யோகி தவத்தால் ஜீவாத்மாவைச் சித்தித்தால் ஜீவன் முக்தனாகிறான்.
2) சித்தித்தது பழுக்க ஓரிரு பிறவிகளாகும். அதுவரை காத்திருக்கிறான்.
3) ஜீவாத்மா பரமாத்மாவை எட்டினால் கரைந்துவிடும் என்பது மரபு.
4) அது மோட்சம்.
5) அதன் நிலைகள் மூன்று.

ஜீவாத்மா பரமாத்மாவின் பகுதி. பரமாத்மாவை எட்டிய உடன் அதில் ஜீவாத்மா கரைகிறது என்பது தத்துவம்; அனுபவம். அதனால் மரபில் ஜீவாத்மாவுக்கு அமரத்துவம் இல்லை.

## பகவான் கூறுவது

பிரம்மம் மூன்று நிலைகளில் உள்ளது. அதில் மனிதன் ஒன்று, பிரபஞ்சம் ஒன்று. பிரம்மம் கடந்தது. மனிதன் தவத்தால் பிரம்மம் ஆகலாம். பிரம்மமானபின் பிரபஞ்சத்தின் பிரம்மத்தை எட்டி, பிரபஞ்சத்தில் தன்னைப் பூர்த்தி செய்யலாம். தன்னில் பிரபஞ்சம் பூர்த்தியாக அனுமதிக்கலாம். பின் அதனின்று உயர்ந்து, கடந்த நிலை பிரம்மத்தை அடையலாம். மனிதன் எதைச் செய்வதற்கும் சுதந்திரம் பெற்றவன்.

1) தான் நேரடியாக பிரம்மத்தை உயர்ந்து அடைவது மோட்சம். அதில், பிரம்மத்தின் முக்கிய அம்சமான பிரபஞ்சம் விட்டுப்போகிறது. படித்து வேலைக்குப் போனவன் வீட்டைக் கைவிட்டது போலாகும்.
2) மனிதன் தன்னை மறந்து பிரபஞ்சத்தில் ஒன்றி உயர்ந்தால், மனிதனுடைய சிறப்பு வெளிவருவதில்லை. அது கட்சிச் சேவையாகும்.
3) தன்னைப் பூர்த்தி செய்து, பிரபஞ்சத்திலும் தன்னைப் பூர்த்தி செய்து, பிரம்மத்தை அடைவது மனிதன் படித்துச் சிறந்து, கட்சியில் சேர்ந்து உயர்ந்து, நாட்டுக்குச் செய்யும் சேவை கட்சியையும், வீட்டையும் பூர்த்தி செய்வதாகும்.

**அதுவே பகவானுடைய பூரண யோகம். வாழ்வை ஏற்று,**



**உலகை ஏற்று, பிரம்மத்தில் அவையிரண்டும் பூர்த்தி ஆகும்படி யோகத்தைச் செய்வது.**

## பௌத்தம்

ஆத்மா என்ற ஒன்றில்லை. இருந்தால், அதைத் தவம் கரைக்கும் என்பதால், ஆத்மாவுக்கு அமரத்துவம் என்ற கேள்வி அவர்கட்கு எழுவதில்லை.

## மரபு

நோக்கம் ஜீவாத்மாவைப் பரமாத்மாவில் கரைப்பது என்பதால் ஜீவாத்மாவுக்கு அமரத்துவம் தரும் அவசியம் அவர்கட்கில்லை. ஜீவாத்மா அமரத்துவம் பெற்றால் எப்படி மோட்சம் பெறுவது?

## பகவான் நிலை

இவரது கொள்கை ஆன்மீகப் பரிணாமம். மரபு, ஆன்மா ஆதியந்தமற்றது, மாற்றமற்றது, வளர்ச்சியற்றது என்கிறது. பகவான் ஆத்மா வளர்கிறது என்கிறார். *வளராத ஆத்மா வளர்ச்சியை நாடுவதே சிருஷ்டி என்பது அவர் கொள்கை.* அதனால் மரபு கூறும் ஆத்மாவை ஆத்மா எனவும், தான் கூறும் ஆத்மாவை (Psychic being) வளரும் ஆத்மா எனவும் கூறுகிறார். மனத்தில் ஆரம்பித்து, கீழ்நோக்கி, உயிரின் வளரும் ஆத்மா, உடலின் வளரும் ஆத்மா எனவும், மேல்நோக்கி, 4 கட்டங்களுக்குரிய வளரும் ஆத்மாவாகத் தொடர்ந்து வளர்கிறது என்கிறார். தெய்வீக மனத்தைத் தாண்டி வளரும் ஆத்மா சத்தியஜீவியத்தை அடைந்தால், அது சத்தியஜீவன் ஆகிறது. அந்நிலையில் அது ஈஸ்வரனாகிறது. அதே சமயத்தில் அது உடலின் வளரும் ஆத்மாவுடன் கலந்து பூரணம் பெறுகிறது எனக் கூறுகிறார்.

**பூரண யோகம் ஆத்மாவின் வளர்ச்சியை ஏற்பதால்,**

**ஆத்மாவுக்கு அமரத்துவமில்லாமல் இவ்வளர்ச்சி ஏற்படாது என்பது தத்துவம்.**

மேலும் விஞ்ஞானமய புருஷன் (சத்தியஜீவன்) ஏற்பட்ட பின்னும் பரிணாமம் தொடர்ந்து ஆனந்தமய புருஷன் வெளிவருவான். முடிவாக அவன் மூன்றாம் நிலைக் காலத்துச் சத்புருஷனாவான். ஆத்மாவுக்கு அழிவில்லை என்பது பகவான் கொள்கை. இவர் யோகம் பூர்த்தியாக இக்கொள்கை அவசியம் எனப் பல இடங்களிலும் வலியுறுத்தி எழுதுகிறார்.

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

பக்தன் தன் உச்சக்கட்டத்தில் அன்னையுடன் வாழ்வில் ஒன்றிவிட்டால், அவனுக்குரிய அதிகபட்சப் பலனுண்டு.

***அன்னை பக்தனின் உச்சி.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

விளையாட்டில் தன்னை மறந்தவன் ஆசையால் உந்தப்படுபவன், அந்நிலைக்குரிய அளவுகடந்த சக்தியைப் பெற்றவனாவான். சக்தி முழுவதும் இறைவனை நோக்கி அது போல் சென்றால், மனித சந்தோஷம், பிரம்மத்தின் ஆனந்தமாகும்.

***இறைவனை நாடும் மனித செயல் அனுபவிப்பது***
***பிரம்மத்தின் ஆனந்தம்.***



## தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

(சென்ற இதழின் தொடர்ச்சி....)

கர்மயோகி

**41.** உயர்ந்தார் படுங்குற்றம் குன்றின் மேல் இட்ட விளக்கு.

(சிறியவர்கள் நிறைய குற்றங்கள் செய்தாலும் அதனை உலகம் பெரிதாகக் கொள்ளாது. ஆனால் உயர்ந்தவர்கள் சிறிய குற்றத்தைச் செய்தாலும் அதைப் பெரிதுபடுத்தி, உலகுக்குச் சொல்லும்).

✡ **சிறு நல்லதற்கு பெரும் பலனுண்டு.**
**சிறு தவறுக்கும் பெரும் தண்டனையுண்டு.**

**42.** பூவோடு நாரியைக்கு மாறு.

(பூவோடு நாறும் மணக்கும் - வழக்கிலுள்ள பழமொழி).

✡ **அன்பர் சூழலும் அருளைத் தாங்கி வரும்.**

**43.** கைக்குமே தேவரும் தின்னினும் வேம்பு.

(தேவர்கள் தின்றாலும் வேம்பு கசக்கும். வேம்பின் குணம் கசப்பு).

✡ **வேம்பும் இனிக்கும் சமர்ப்பணம்.**

**44.** அறிந்து, அறிந்து செய்கிற பாவத்தை
அழுது, அழுது தொலைக்க வேண்டும்.

✡ **அறிந்து, அறிந்து செய்த பாவத்தை உணர்ந்து, நெகிழ்ந்து, சமர்ப்பணம் செய்வது புனர்ஜென்மம்.**

**45.** அறிவு ஆரறிவார், ஆய்ந்தவர் அறிவார்.

✡ **அன்னையை யாரறிவார், அனுபவித்தவர் அறிவார்.**

தொடரும்....

❀ ❀ ❀

## அன்பர் கடிதம்

என் கணவர் 30 வருடமாக ஒரே கடைக்கு நகைப் பெட்டி செய்து கொடுத்தார். ஆனால் 10 வருடமாகப் பெட்டி செய்து கொடுக்கவில்லை. என் கணவருக்கு வேலை இல்லாமல் நாங்கள் ரொம்பக் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தோம். நான் தினமும் அன்னையை வந்து வணங்குவது வழக்கம். திடீரென்று ஒரு நாள் போன் வந்தது, முதலில் என் கணவர் வேலை செய்த கடையிலிருந்து. எங்களுக்கு ரொம்ப ஆச்சரியம். ஜனவரி முதல் நாளே *(1-1-2008)* ''பெட்டி செய்து கொண்டு வா'' என்று சொன்னார்கள். நாங்கள் மறுபடியும் போன் செய்து கேட்டோம். ''எங்களையா பெட்டி செய்துகொண்டு வரச் சொன்னீர்கள்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டோம். அந்த அளவிற்கு அன்னை எங்கள் வாழ்நாளையே மாற்றிவிட்டார்கள். இப்பொழுது அன்னை இல்லாமல் எங்கள் வாழ்வில் ஒன்றும் இல்லை என்ற அளவிற்கு எங்களை முற்றிலும் மாற்றிவிட்டார்கள்.

- R. ***ஜெயலட்சுமி, பெரம்பூர், சென்னை-11.***

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

எண்ணம், மனத்தின் ஆசை.

தனக்குக் கிடைக்காததை உணர்வு ஆசையால் எட்டுவது போல், தனக்குப் புரியாததை மனம் எண்ணத்தால் எட்டித் தொட முனைகிறது.

***மனம் பொருளைத் தொட முனைவது எண்ணம்.***



## முன்னேற்றம் தரக்கூடிய சாதனை

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

**N.** அசோகன்

### HARMONY - சுமுகம் :

சுமுகம் என்பது சத்தியஜீவியத்தைச் சேர்ந்தது என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் கூறியிருக்கின்றார்கள். சுமுகம் இருந்தால் வெற்றி நிச்சயம் என்றுகூடக் கூறலாம். ஒரு தனி மனிதனோ, குடும்பமோ, organisationனோ முன்னேறியிருக்கிறது என்றால் அதன் பின்னணியில் சுமுகம் நிச்சயமாக இருக்கும். சுதந்திரத்திற்கு முன்பாகப் பல குறுநில மன்னர்களுக்கிடையே தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருந்த பூசலால் இந்திய நாட்டின் வளர்ச்சி தேங்கிக் கிடந்தது. அந்த நிலையிலே அன்னியப் படையெடுப்பு அவசியமாகி, நாடு ஒற்றுமைப்பட்டு, சுதந்திர இந்தியா வெளிப்பட வகை ஏற்பட்டது.

அதேபோல் ஒரு கம்பெனியில் நிர்வாகத்திற்கும், தொழிலாளர்களுக்குமிடையே சுமுகம் இருந்தால், அந்தக் கம்பெனி தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் செல்வதைக் காணலாம். அப்படியில்லாமல் எப்பொழுதும் கொடி பிடிக்கும் நிலையிலுள்ள கம்பெனி விரைவில் மூடப்படுவதையும் காணலாம். ஒரு நாட்டிற்கு, ஒரு organisationக்கு எந்தச் சட்டமோ அதுவேதான் ஒரு தனி மனிதனுக்கும்.

எந்தவொரு கம்பெனி, societyயின் எதிர்பார்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதனுடன் இணைந்து செயல்படுகின்றதோ, அந்தக் கம்பெனியின் விற்பனை (turnover, sales) பெருகிக் கொண்டு போவதை நாம் காணலாம். அதாவது அந்தக் கம்பெனி has related itself harmoniously with the society என்று கூறலாம்.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டால், நாடெங்கிலும்

ஆயிரக்கணக்கான கல்வி நிலையங்கள் இருந்தாலும், சமூகம் (குடும்பம்) தங்கள் குழந்தைகளுக்குத் தரமான கல்வி வேண்டும் என்று எதிர்பார்க்கின்றது. அந்த எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்படுகின்ற கல்வி நிலையங்கள் கூடுதல் fees வசூலித்தாலும், அங்கு admissionக்குப் பெரிய க்யூ (Q) நிற்பதைப் பார்க்கலாம். இதை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது Government பள்ளிக்கூடத்தின் நிலை என்ன? இதையே வேறுவிதமாகக் கூறினால், எந்த நிறுவனம் (society) சமூகம் எதிர்பார்க்கின்ற பண்புகளைக் (values) கடைப்பிடிக்கின்றதோ, அதற்கு வரவேற்பு அதிகமாகவும், மற்றவற்றிற்குக் குறைவாகவும் இருப்பதை நாம் காணலாம்.

ஸ்ரீ கர்மயோகி அவர்கள், "நாம் சுமுகத்தின் முக்கியத்துவத்தை அறியவில்லை, அனுபவிப்பதில்லை" என்று கூறுகின்றார்கள். ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் முன்னேறுவதற்குச் சுமுகம் மிகவும் அவசியமான ஒன்று. அழகாகப் பழகுவது நமக்குச் சுமுகம் எனப் பெயர். அது நல்லது. ஆனால் சாதிக்கும் திறன் அற்றது. உள் உணர்விலிருந்து எழுகின்ற சுமுகமே உண்மையான சுமுகம். எனக்கு என் குடும்பத்தின் சுமுகம் முக்கியம். அதற்காக நான் எதையுமே சந்தோஷமாக, எரிச்சல், எதிர்பார்ப்பு, மனக்கசப்பு இல்லாமல் விட்டுக்கொடுக்கின்றேன் என்ற மனநிலை அந்தக் குடும்பத்தை உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லும். அப்படிப்பட்ட சுமுகம் உண்மையாகப் பிறர் மீதுள்ள நல்லெண்ணத்தால் ஏற்படும் சுமுகமாகும். அந்தச் சுமுகம் வாழ்வில் சாதிக்கும் திறனுடையது.

ஆன்மீகத்தில் சுமுகம் என்பது முக்கியமாக நம்முள்ளிருந்து எழும் சுமுகமாகும். அதாவது நம்முடைய ஆன்மீக ஆர்வத்திற்கு நம்முடைய personality முழுமையாகக் கொடுக்கும் ஒத்துழைப்பு ஆகும். நம்முடைய எண்ணம், உணர்வு, செயல், கரணங்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து இறைவனை நோக்கி முன்னேற எடுக்கும் முயற்சியாகும். நம்முடைய தாழ்ந்த பாகங்கள், குணங்கள், எண்ணங்கள் வெளிவந்து நம்மைத் தொந்தரவு செய்யுமானால் ஆன்மீக முன்னேற்றம் அந்த அளவுக்குப் பாதிக்கப்படும். நம்முடைய இலக்கை எட்டும் காலமும் நீண்டுவிடுகிறது. அன்னை சுமுகம் என்று



ஒரு மலருக்குப் பெயரிட்டு இருக்கின்றார்கள். அதைத் தினமும் சமர்ப்பணம் செய்து வழிபட்டால் அங்கு சுமுகம் ஓங்குவதைக் காணலாம்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஒரு சிலரைத் தவிர, அன்னையை நாடி வருபவர்களில் மற்றவர்கள் கடைசிவரை அன்னையோடிருப்பதில்லை. கடைசிவரை இருப்பவர்கள் அன்னையிடம் நெருங்கி வந்து அவர் இதயத்தில் தங்கிவிடுவார்கள். மற்றவர்கள் விலகி விடுகின்றனர். அவர்களில் சிலர், அன்னையை மறந்து விடுகிறார்கள். யாரோ ஒரு சிலர் அன்னையிடமிருந்து பெற்றதையும் விட்டுவிடுகிறார்கள். இவர்களில் ஒருவரைக்கூட அன்னை மறப்பதில்லை. எந்த அளவில் தொடர்பு நிற்கின்றதோ, அதே அளவில் அருள் செயல்படுகிறது.

விலகியவர்கள் அன்னை மூலமாக வந்த செல்வத்தை இழப்பது இல்லை. ஏற்கனவே தானே வந்த பெருஞ்செல்வத்தை இப்பொழுது பெற அதற்குரிய உழைப்பைக் கொடுத்துப் பெற வேண்டியிருக்கும். அது வாழ்க்கைக்குரிய போராட்டமாக இருக்கும்.

அன்னையை மறந்தவர்கள் ஏதோ ஒரு சமயம் மீண்டும் அன்னையை நினைவுபடுத்தும்பொழுது அருள் முன்போல் மழையாகப் பொழிந்து செயல்படுவதைக் காணலாம். அருளை வீசி எறிந்தவர்கள் மீண்டும் அதை அடைய அதற்கே உரிய பிரம்மப்பிரயத்தனத்தை மேற்கொண்டு கண்ணால் இரத்தம் சொரிய வேண்டியிருக்கும்.

***வலிய விலகியவருக்கும் வழங்கும் அருள்.***

## யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**922) காலத்தால் சமூகம் சாதிப்பதை, யோகம் ஆன்ம விழிப்பின் தன்னறிவால் சாதிக்கும். ஒரு சிறு அளவில் நாம் இதன் மூலம் காலத்தைக் கடக்கிறோம்.**

***யோகம் காலத்தைக் கடக்கும்.***

✡ வேகமான பிரயாணம் காலத்தைச் சுருக்கும்.
அதுவே இடத்தையும் சுருக்கும் எனக் கொள்ளலாம்.

✡ நாம் ஹைதராபாத் போய், சம்மந்தியைச் சந்தித்து, நம் தொழிலில் அவரை முதலீடு செய்யக் கேட்க விருப்பப்பட்டால், எத்தனை முறை போவது, அவர் நம் கருத்தை ஏற்பாரா, ஏற்றால் எந்த அளவுக்கு முதலீடு செய்வார் என்பவை நடைமுறையில் பல மாதங்களாகும். பெருந்தொகை போட வேண்டுமானால், சிறு தொகையில் ஆரம்பித்து, அனுபவப்பட்டு, நம்பிக்கை ஏற்பட்டபின் செய்வார். அவை பல வருஷங்களாகும். அதுவும் பல விஷயங்களைப் பொருத்தது.

மனம் அவ்விஷயத்தின் பாகங்களை எடுத்து, ஒவ்வொன்றையும் சம்மந்தி எப்படி நினைப்பார், அதற்கென்ன பதில் என யோசனை செய்தால், அப்பேச்செழும்பொழுது சம்மந்தி எதிர்ப்பில்லாமல் நம் கருத்துகளை ஏற்பதைக் காணலாம்.

மனம் கேள்வி எழுப்பி, பதில் தயார் செய்வதற்குப் பதிலாக எழும் கேள்விகளைச் சமர்ப்பணம் செய்வது அதைவிடச் சிறந்தது.

இதுபோன்ற விஷயங்கள் எளிதில் சமர்ப்பணம் ஆகா. நாம் சமர்ப்பணம் செய்ய முயன்றால், மனம் சம்மந்தி எழுப்பாத கேள்விகளையும், எவரும் எழுப்பாத கேள்விகளையும் எழுப்பும்; அடங்காது.

மனம் அடங்கினால் பிறரிடமிருந்து எதிர்ப்பு எழாது.

இந்த எண்ணம் தோன்றியது முதல், ஹைதராபாத்திற்கு போக அவசரம் எழும்.



'சம்மந்தியைக் கேட்கப் போவதில்லை; அன்னையைக் கேட்கப் போகிறேன்',

'ஹைதராபாத் போகவில்லை; உள்ளே அன்னையிடம் போகப் போகிறேன்' என்பது போல் எழுந்த 100 கேள்விகளுக்கும் உள்ளே போகும் பதிலை மனம் ஏற்று அடங்கினால், நாம் செய்யும் காரியத்திற்கு யோகத் தகுதி வரும்.

அது வந்த பின்னும் உள்ளே படபடப்பு ஓரளவிருக்கும்.

படபடப்பு போன பின்னும் அமைதி வாராது.

அமைதி வந்தால் நீடிக்காது.

'தொழிலில் முதலீடு' மனத்திலிருந்து, பாரமாக இல்லாமல் லேசாகும் வரை காத்திருந்தால் சம்மந்தி வருவார்.

நாம் கேட்க வேண்டியதெல்லாம் அவரே சொல்வார்.

வேலை முடியும்.

பல ஆண்டு வேலை சில மணி நேரத்தில் முழுமையாக, இனிமையாகப் பூரணம் பெறும்.

**யோகம் இவ்வழி காலத்தைக் கடக்கிறது.**

✡ யோகம் காலத்தைக் கடப்பதைப் போல்

இடத்தையும் கடக்கும்;

மனத்தையும் கடக்கும்;

கர்மத்தைக் கடக்கும்.

யோகம் என்பது பூவுலகைக் கடந்த மேலுலக வாழ்வு.

யோகம் பரிணாமத்தைக் கடப்பது என்பதால், காலம், இடம், மனம், கர்மம் பரிணாமத்தின் பகுதிகள் என்பதால் யோகம் அனைத்தையும் கடக்கும்.

❀ ❀ ❀

**923) உடைமைகளை இழப்பதை மட்டும் மனிதன் கண்டு வருத்தப்படுவதில்லை. தன்னைப் பிடித்த துர்அதிர்ஷ்டங்கள் போனாலும் வருந்துவான். அடுத்த கட்டமடைந்த**

**பின்னும், முன் கட்டத்தின் உணர்வுகளினின்று விடுதலை பெறாவிட்டால், முன் கட்டத் திறமைகள் போனால் வருத்தம் எழும்.**

***தரித்திரம் போனாலும் மனம் தத்தளிக்கும்.***

- ✡ ‘விருதுபட்டிக்குப் போன சனியனை வீட்டு வரைக்கும் வந்துவிட்டுப் போ’ என்றான்.
- ✡ எந்த மனிதனுக்கும் அவனால் தீர்க்க முடியாத பிரச்சினைகள் எழுவதில்லை - அன்னை.
- ✡ நாமே சோகத்தைப் பிடித்துக்கொள்ளாவிட்டால், சோகம் நம்மை விட்டுப் போகும் - அன்னை.
- ✡ ஒரு பிரச்சினை எழுந்தால், அதன் தீர்வு அதனுள் இருக்கும்.
- ✡ அமெரிக்கர்கள் எதையும் முடியாது என விடமாட்டார்கள்.
- ✡ கர்மம் நாம் ஏற்பதனால் நம் வாழ்வில் பலிக்கிறது.
- ✡ விதியை மதியால் வெல்லலாம்.
- ✡ இறைவனால் என்ன பெறலாம் என மனிதன் புரிந்துகொண்டால், அரை நிமிஷம் பொறுக்கமாட்டான்.
- ✡ அதிகாரம், சமூகம், கர்மம், தலைவிதி ஆகியவை நாம் ஏற்றுக் கொண்டால்தான் நம்மை ஆள முடியும்.
- ✡ எதை மனிதன் ஆர்வமாகத் தேடுகிறானோ, அவன் அதை அடைவான். அவனே அதுவாக மாறுவான். கீதையின் சொல்லை மாற்றி, “இன்று நாமுள்ள நிலையை நாம் பல நாள் விரும்பி அழைத்துப் பெற்றுள்ளோம்” எனவும் கூறலாம்.
- ✡ அறியாமையை மனிதன் ரசிப்பதால், ஞானம் செயல்பட முடியவில்லை - பகவான் ஸ்ரீ அரவிந்தர்.
- ✡ எலியைப் பெண்ணாக மாற்றிய ரிஷியால் பெண்ணின் சுபாவத்தை மாற்ற முடியவில்லை - மூஷிகம் என்ற கதை.
- ✡ வறுமை என்பது கெட்ட எண்ணம்.



உலக மரபில் இந்த ஞானம் எல்லா நாடுகளிலும் இருப்பதை நாம் காண்கிறோம்.

- ✡ சர்க்கரை இனிப்பாக இருக்கிறது. பாகற்காய் கசக்கிறது. மனிதன் இனிக்கும் சர்க்கரையை நாடுவான், கசக்கும் பாகற்காயை விட்டு விலகுவான் என்று கூறினால் அது உண்மை.

  நெடுநாள் பாகற்காயைச் சாப்பிட்ட பிறகு, *பாகற்காய் ருசிக்கும். வாய் அதைத் தேடும். சர்க்கரையைவிட பாகற்காய் அவருக்கு விருப்பமாக இருக்கும்.*

  இதை பழகிய தோஷம் என நாம் கூறுகிறோம்.

- ✡ விருந்து பல நாள் ரசித்துச் சாப்பிட்டவர்க்கு வீட்டிற்கு வந்து வத்தல் குழம்பும், சுட்ட அப்பளமும் சாப்பிடுவது ருசிக்கிறது. இதில் எதிர்மாறான பல உண்மைகள் உண்டு.

  1. வத்தல் குழம்பின் ருசி எந்த விருந்திற்கும் வாராது.
  2. இதுவும் பழகிய தோஷம்.
  3. *வத்தல் குழம்பு வறுமையின் சின்னம். அது ருசிப்பது வறுமை மீதுள்ள பாசம். அது ருசிக்கும்வரை அதிர்ஷ்டம் உள்ளே வாராது.*
  4. விருந்தில் உள்ள ருசி உயர்ந்த சாப்பாட்டின் ருசி. அதையும் கடந்து அதனுள் ‘ரஸா’ உண்டு. விருந்திலும், வத்தல் குழம்பிலும் உள்ளது ஒரே ‘ரஸா’. அதை அனுபவிப்பது யோக அம்சம். அவருக்கு இரண்டும் ஒன்றே. விருந்தின் உயர்வும், வத்தல் குழம்பின் வறுமையும் தோற்றம். ‘ரஸா’ இரண்டிலும் பிரம்மம். ‘ரஸா’வை அனுபவிப்பது பிரம்ம ஞானம், பிரம்ம ஸ்பர்சம்.
  5. விருந்தை நாடாத மனம், வத்தல் குழம்பைப் பெருமையாக நினைக்காத மனம் யோக சமத்துவம் (equality) உள்ளது.
  6. சமர்ப்பணம் செய்து சாப்பிடுபவர்க்கு அந்தச் சமத்துவம் ‘ரஸா’வைத் தெரிவிக்கும்.
  7. சமர்ப்பணத்தால் வத்தல் குழம்பு விருந்தாவது திருவுருமாற்றம்.
  8. எதையும் கேட்டுப் பெறும் மனமில்லாமல், தானே வருவதை ஏற்பது யோக நிலை.

9. அந்நிலையில் தரித்திரமோ, அதிர்ஷ்டமோ வந்தாலும், போனாலும் மனம் தத்தளிக்காது; ஆர்ப்பாட்டம் செய்யாது. அமைதியான ஆனந்தம் அனுபவிக்கும்.

❀ ❀ ❀

**924) வீண் பெருமைக்குத் தீவிர உணர்வில்லை. பெற்ற வெற்றியைப் பொருளாகப் பெறுதலுக்குத் தீவிரமுண்டு. சாதனைக்குத் தீவிர நிறைவுண்டு.**

*தீவிரம் பெருமைக்கில்லை; சாதனைக்குண்டு.*
*பெருமை தோற்றம்; சாதனை உள்ளுறை விஷயம்.*

Ascent to Truth, சத்யாரோகணம் என்பது அன்னை எழுதிய கதை. சத்தியம் என்ற இலட்சியத்தையடைய இரு சாதகர்கள், ஒரு சமூக ஊழியன், ஒரு இலட்சியவாதி, ஒரு பரோபகாரி போன்ற பலர் சேர்ந்து முயல்கிறார்கள். சத்தியம் என்பது ஒரு மலை. அன்னை இதை ஒரு வரைபடமாகவும் வரைந்துள்ளார். முதற்கட்டம் செங்குத்தான மலை. அனைவரும் பெரும்பாடுபட்டு அதை முடித்துவிட்டவுடன், இதுவே முடிவு என ஒருவர் - பரோபகாரி - நின்றுவிடுகிறார். அடுத்த கட்டம் மேலும் சிரமமானது. இலட்சியவாதி அதுவரை வருகிறார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்டத்துடன் நின்று விடுகிறார்கள். சாதகர் இருவர் மட்டும் மலை உச்சியை அடைகின்றனர். அதற்கும் அடுத்த கட்டம் உண்டு என்று அவர்கள் அதுவரை அறியவில்லை. அது உச்சியில் இருந்து மலையடிவாரத்திற்குக் குதிப்பது. அதை நம்பிக்கையால் செய்ய வேண்டும். செய்தால் அருணகிரிநாதரைச் சிவன் ஏந்திப் பிடித்தது போல் ஆண்டவன் காப்பாற்றுவான். இது யோக சத்தியம். தவம், துறவறத்தைக் கடந்த நிலை. சத்தியம் என்ற கொடியைக் கொடிமரத்தில் உயர்த்துவது யோகம். உச்சிவரை உலகத்தைச் சார்ந்தவர் வருவதில்லை. அது சாதகர்க்கே உரியது. முடிவு அதையும் கடந்தது. உலக வாழ்வு சிறியதானாலும், அமைப்பு இரண்டுக்கும் ஒன்றே.



✡ இம்முயற்சியை சத்தியம் x பொய்; ஒளி x இருள்; நன்மை x தீமை; எனப் பலவாறான முரண்பாடுகளாகப் பிரிக்கிறார்கள். அவற்றுள் ஒன்று
தோற்றம் x உள்ளுறை விஷயம்; அல்லது,
பெருமை x சாதனை.

✡ வளர்ந்த மனிதன் படித்துப் பட்டம் பெற்று, வேலை செய்து, திருமணமாகி, குடும்பம் நடத்தி, இலட்சியமானவனாக வாழ்வை முடிப்பது மிகச் சிறு காரியமானாலும், பூரணமான சிறு சாதனை.

- ❀ படிப்பில் பட்டத்தைக் கடந்து, படிப்பைத் தொடர்ந்தால் நோபல் பரிசு பெறும் அளவுக்கு உயரலாம்.
- ❀ வேலை செய்வதில் திறமை வெளிப்பட்டால் பெரும் தொழில் அதிபராக வரலாம்.
- ❀ திருமணமாகி, குடும்பம் இலட்சியமாக நடத்தினால் வள்ளுவர், வாசுகியாகலாம்.
- ❀ மனிதன் எதிலும் முடிவு வரை உறுதியாக இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதில்லை.
- ❀ படிப்பு, முதல் பட்டத்துடன் முடிகிறது; வேலை, வசதியில் முடிகிறது; திருமணம் பிள்ளைப்பேற்றில் முடிகிறது.
- ❀ சாதனையை யோகத்தில் தேடுபவர் அரிது.
  படிப்பில் தேடுபவர் பில்கேட்ஸ், நாராயண மூர்த்தி ஆகிறார்.
  திருமணத்தில் இலட்சியத்தை எட்டலாம்.
  எதிலும், எந்த இலட்சியத்தையும் தடுப்பது பெருமை.
  பெருமை, ஆதாயம், பிரபலம், அந்தஸ்து பெரும்பாலானோர்க்கு முடிவான கட்டம்.
- ❀ **எந்தக் கட்டத்திலும் சிறப்பை விடுத்துப் பெரியதை நாடுவது சிறப்பு.**

தொடரும்.....

**ஜீவிய மணி**

**அறிவு எழுமுன் அறியாமை அரசு செலுத்தும்.**

# அன்றைய தோல்வி, இன்றைய வெற்றி

கர்மயோகி

''என் அம்சம் தரித்திரம். நான் தொட்டதெல்லாம் கரியாகும்'' என்று வாழ்நாள் முழுவதும் உணர்ந்தவர், அன்னையிடம் வந்தபின் காரியங்கள் கூடிவருவதையும், பிறர்க்குப் பலிக்காதது அவருக்குப் பலிப்பதையும், தம் வாழ்வில் அதிர்ஷ்டம் பிறந்துவிட்டதையும் காண்பது அநேகர் அனுபவம். அனைவருடைய அனுபவம் என்பது என் அனுபவம். அது உண்மையானால் அதற்கடுத்த உண்மையுண்டா? அதற்கு எதிரானது உண்மையா?

1) **அதற்கடுத்த உண்மை, அன்றைய தோல்வி, இன்றைய வெற்றி.**

2) அதற்கெதிரானது அன்பர், 'எனக்கு எல்லாம் பலிக்கிறது. ஒரு விஷயம் மட்டும் பலிக்க மறுக்கிறது' என்பது. மேலும், 'வந்த புதிதில் எல்லாம் பலித்தது. இப்பொழுது எதுவும் பலிக்கமாட்டேன் என்கிறது' என்பதும் அன்பர் அனுபவம்.

ஒரு விஷயம் பலிக்கவில்லை என்பவர் அவ்விஷயத்தில் அவர் தம் சுபாவத்தை வலியுறுத்துகிறார், மனம் மாற மறுக்கிறார் என்று பொருள்.

'எதுவும் பலிக்கமாட்டேன் என்கிறது' என்பவர் பிரார்த்தனை பலிப்பதைக் கண்டவர், எதிரியழியப் பிரார்த்தனை செய்து, மகிழ்ந்து, தொடர்ந்தால், அதன்பின் அவர் அன்னையை விட்டு விலகுவார்; எதுவும் பலிக்காது.

அன்னையை அறிந்தபின் வாழ்க்கை மாறிவிட்டது; தோல்வி என்பதேயில்லை. நான் திறமையாக வேலை செய்து ஜெயித்தபின், என் வெற்றி என்னை வந்து சேரவில்லை என்பது பலர் அனுபவம். அது பழைய அனுபவம். இப்பொழுது அது மாறிவிட்டாலும், ஏற்கனவே பெற்ற தோல்விகள் மனதை உறுத்தும். பிரார்த்தனையாலும் அவை முழுவதும் போகாது என்பதை *'உறுத்தல்'* என்ற கட்டுரையில் எழுதுகிறேன். இது என் மனத்தை ஆட்கொண்ட பிரச்சினை. இதற்குரிய விளக்கம் எனக்குத் தெரியும். விளக்கம் நிலைமையை மாற்றாது. நீண்டநாளாக என் மனதிலுள்ள கருத்து. *சாவித்திரி* இதை



ஆமோதித்தும், மறுத்தும் பேசுகிறது.

Knowledge is power ஞானமே சக்தி என்பது ஸ்ரீ அரவிந்தம். நமக்குப் பிடிபடாத விஷயத்தில் நமக்குத் தெளிவான ஞானமிருக்காது. தெளிவு பெற்றவுடன் நிலைமை மாறும்.

✡ நம் எதிரிகள் உடன்பிறந்தவர்களாகவும், நண்பர்களாகவும், குரு ஸ்தானத்திலும், சிஷ்யர் உறவிலும் இருந்தால், அவர்கட்கு நம் மீதுள்ள வெறுப்பு நம்மை அழித்துக் கைதட்டிச் சிரிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை மீறி அவர்கட்கு நாம் முனைந்து நல்லது செய்ய ஆரம்பித்துத் தோல்வியடைகிறோம். அன்னை இதைச் சிறுபிள்ளைத் தனம் என்கிறார். பிறர் கர்மத்தை நாம் ஏற்கக்கூடாது என்கிறார்.

இந்த இடத்தில் சிரமப்படுபவர் குறைவு, மிகக் குறைவு.

இதில் தோல்வியுறாதவரைக் காண முடியாது.

அந்தச் சட்டத்திற்கும் விதிவிலக்குண்டு.

தனக்கு அருள் தரும் பெரிய அதிர்ஷ்டத்தை இழந்து எதிரிக்குச் சிறு பலன் தர முயன்று வெற்றி பெறுவதாகும்.

அன்னையை அறிவதன் முன் நிதானமில்லாமல், பொறுமை இல்லாமல், முன்யோசனையில்லாமல், இழந்தவற்றை நினைத்து மனம் பொருமுவது இப்பொழுது குறைந்து, நீங்கும். கல்லூரியில் முதல்வனாக வர முயன்று இழந்தது நிலை மாறி இன்று செய்யும் காரியங்களில் முதல்வனாக வருவதைக் காணலாம். 25 ஆண்டுகட்குமுன் கோவாப்பரேட்டிவ் பாங்கில் வேலை செய்து, அகில இந்தியாவில் முதன்மை பெற்றவர் ஓய்வெடுத்த பின், அன்று அன்பரை வழியில் கண்டு பேசி மகிழ்ந்த பின், அந்த நிறுவனம் அவரை அழைத்து விழாக் கொண்டாடி, விருது அளித்தது. **நெடுநாள் முன் தோற்ற காரியத்தில் இன்று அன்னையை ஏற்றதைப் போல், அன்று ஏற்றிருக்க முடியும் என்ற தெளிவு பூரணமாக ஏற்பட்டால், அதன் நிலைமை மாறி அன்று பெற்றிருக்க வேண்டிய விருது, பாராட்டு, பதக்கம் இன்று வரும் என்று மனம் தெளிவாக ஏற்றபின், அறையிலிருந்து வெளியே வந்தேன். ஒரு செய்தி எனக்குக் காத்திருந்தது.** பழைய விஷயங்கள்

மாற வேண்டும் என்பது அவசியமில்லை. அவை மாற முடியும் என்பது அன்னை கூறும் உண்மை என மனம் தெளிவு பெற்றது.

ஆங்கில உரைநடையில் பெயர் பெற்றவர் அடிசன், ஸ்டீல், மேத்தியூ ஆர்னால்ட். அவர்கட்கெல்லாம் சிகரமானவர் மில்டன். பேராசிரியர்கட்கு அவர்கள் எழுதியது பரிச்சயம். பகவான் ஸ்ரீ அரவிந்தர் உரைநடையுடன் அவற்றை ஒப்பிடும் அளவுக்கும் அவை உயர்ந்தவையல்ல என எளிமையாக அறியலாம். மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்திக்கு நோபல் பரிசு தவறியது அவர்கட்கு தகுதியில்லாமலில்லை. அபரிமிதமான தகுதி பெற்றவர்கள் என்பது வெள்ளிடைமலை. இது என் மனத்தை உறுத்தும் விஷயங்களில் முக்கியமானது. **யோகச் சட்டப்படி மனத்தில் உறுத்தல் இருப்பது தவறு**. என் முயற்சிகளால் உறுத்தலின் வேகம் குறைந்தது, விலகவில்லை. நான் இவ்விஷயத்தில் தெளிவு பெற்று, அறையிலிருந்து வெளிவந்தபொழுது எனக்காகக் காத்திருந்த செய்தி,

**நோபல் கமிட்டி மகாத்மாவுக்குப் பரிசு தராதது**
**சரியில்லை என அக்கமிட்டியே கூறிய செய்தி**

இன்டர்நெட்டிலிருந்து எடுக்கப்பட்டு எனக்கு வந்தது.

✡ **அன்னை அருள் நிகழ்த்தாத அற்புதமில்லை.**
**நடக்காதது அவ்வருளால் நடக்கும் - அதற்குரிய நிபந்தனை**
**மனித மனத்தால் முடியாத நம்பிக்கை ஞானமாக அங்கு எழ வேண்டும்.**

✡ **நடக்காதது நடக்க, முடியாதது முடிய வேண்டும்.**

✡ **முடியாதது முடிய அன்னையை மனம் முடிந்த உயரத்தில் ஏற்க வேண்டும்.**

**முடிந்ததெல்லாம் முடித்தவர்க்கு முடியாததெல்லாம் முடியும்.**

**அவருக்கு நடக்காததெல்லாம் நடக்கும்.**

**நடக்காதது நடப்பது அன்னையின் அருள்.**

❀ ❀ ❀





# மலரும் மணமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

மகேஸ்வரி

''அவசரமாகச் செல்கின்றீர்கள் போலிருக்கிறதே?'' என்ற தன் காரியதரிசியின் சொல்லைக் கேட்ட தென்னரசு,

''நேரத்தைப் பார்த்தீர்களா, மாலை 5.30. இந்நேரத்தில் புறப்பட்டால்தான் இந்திரா நகருக்குச் சரியான சமயத்திற்குச் செல்ல இயலும். பூபதி, பாங்காக் ஆபீசிற்குச் செல்ல வேண்டியதையெல்லாம் தயார் செய்து வைத்துவிடுங்கள். நான் வந்தவுடன் பார்த்துவிட்டு e-mail அனுப்பிவிடுகிறேன்''.

''சார், இன்றைக்கு என் குழந்தையின் பிறந்தநாள். அதனால் நானும் இப்பொழுதே கிளம்ப வேண்டும்'' என்றார் பூபதி.

''அப்படியா! நீங்கள் செல்லுங்கள். நானே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கின்றேன்'' கூறிக்கொண்டே தன் பர்சிலிருந்து ஐயாயிரம் ரூபாயை எடுத்து, ''நீங்கள் இதை என் அன்புப் பரிசாக உங்கள் குழந்தைக்குக் கொடுங்கள். முன்பே தெரிந்திருந்தால் நல்லதொரு பொருளை வாங்கிக் கொடுத்திருப்பேன். உங்கள் குழந்தை விரும்பும் பொருளை வாங்கிக் கொடுத்தால் எனக்கு மிக்க சந்தோஷமாக இருக்கும்''.

''சார், நீங்களும் இந்தப் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டால், எனக்கும் சந்தோஷமாக இருக்கும்''.

''சாரி பூபதி. இன்றைக்கு என்னால் நிச்சயமாக முடியாது. ஒரு முறை நிச்சயம் உங்கள் வீட்டிற்கு வருகிறேன்''.

''நானும் நீங்கள் சென்னைக்கு வந்ததிலிருந்து கவனிக்கின்றேன். நாள் முழுவதும் அலுவலகத்தில்தான் இருக்கின்றீர்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் மாலை 5.30 ஆனால் மட்டும் எங்கோ செல்கிறீர்களே! கேட்பது தவறுதான். ஆனாலும் இப்பொழுதெல்லாம்

மிகவும் அமைதியாகவும், நிதானமாகவும் இருக்கின்றீர்கள். வந்த புதிதில் எனக்கு ஒரே பதட்டமாக இருக்கும். எந்தச் சமயத்தில் எதைக் கேட்பீர்கள், எப்படிப் பேசுவீர்கள் என்று புரியாது. சமயங்களில் நான் வேறு டிபார்ட்மெண்ட்க்குப் போகக்கூட எண்ணினேன். அதனால்தான் கேட்கிறேன்''.

''நீங்கள் என்னை நன்றாகவே கவனித்திருக்கிறீர்கள் பூபதி. என் மனத்தில் இருந்த டென்ஷன், அவசரம், நிதானமின்மை ஆகியவற்றையெல்லாம் உங்கள் மீது செலுத்தியிருக்கிறேன். இப்பொழுது நான் அனுபவித்துகொண்டிருப்பது ஒரு வசந்தமான பொற்காலம். இந்தப் பொற்காலத்தில் செய்வதிலெல்லாமே ஒரு அலாதியான சந்தோஷம் பிறக்கிறது. முன்பெல்லாம் வேலை உடனடியாக நடக்க வேண்டும், முடிக்க வேண்டும் என்ற பரபரப்பு இருக்கும். இப்பொழுதோ, வேலை நிச்சயமாக நடக்கும், நன்றாக நடக்கும். அதை எந்தவிதத்திலும் தடை செய்யாமல் இருக்க வேண்டியது மட்டுமே என்னுடைய வேலை என்ற தெளிவும், நம்பிக்கையும் பிறந்திருக்கிறது. ஒவ்வொரு நிமிடமும் புத்துணர்ச்சியை அனுபவிக்கிறேன். சோர்வே இல்லாத எழுச்சியான சக்தி உடம்பின் நாடி நரம்புகளில் தொடர்ந்து உருவாகிக்கொண்டேயிருக்கிறது. இதைப் பற்றி எவ்வளவு பேசினாலும் சரி, கடலில் காலை நனைத்தல் போல்தான் இருக்கும். அனுபவிக்க வேண்டும்'' என்று சொன்ன தென்னரசுவின் முகம் வைரத்தைப் போல் ஒளி வீசியது.

✡✡✡✡✡

''அம்மா, இன்றைக்குத் தியானம் அற்புதமாக இருந்தது. அதைத் தவிர எனக்கு வேறு வார்த்தை தெரியவில்லை'' என்ற தென்னரசுவிற்குப் பதிலாக,

''வர வர உங்கள் முகம் ஜொலிக்க ஆரம்பித்திருக்கிறது. முல்லை பார்த்தால் அவ்வளவுதான். புதியதாக வந்திருக்கும் அரசுவின் மறுபிறவியோ என்று மயங்கிவிடுவாள்'' என்றாள் மல்லிகை.

''நீ சரியாகச் சொன்னாய், மல்லிகை'' என்ற ரோஜா, ''ஒரு வருடமாக முல்லை கண்ணில் படாமல் உங்களை அன்னை வைத்து இருக்கிறார். இதற்கு என்ன காரணமென்று தெரியவில்லை. நிச்சயமாக ஒரு காரணம் இருக்க வேண்டும்''.



''ரோஜாம்மா! முல்லையின் முகத்தைப் பார்ப்பதற்கு எனக்கு அருகதை இன்னும் வரவில்லை. ஒரு வருடமாக அன்னையிடம் என்னைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆனால் என்னைச் சுற்றி நடப்பவைகளெல்லாம் அன்னையின் அருளால் நடக்கின்றது என்பது எனக்குப் புரிகிறது. இந்த விஷயமும் நிச்சயமாக அன்னை நடத்திக்கொடுப்பார் என்று தெளிவாகத் தெரிகிறது. மல்லிகையுடன் பேசப் பேச எவ்வளவு விஷயங்கள் புரிகின்றன. மல்லிகையை நான் எப்படி நடத்தினேன் என்று அவளிடம் சொல்ல எனக்குத் தைரியம் இல்லை. என்றைக்காவது அது தெரியாமல் போகாது. அந்தச் சமயத்திலும் அவர்கள் என் மீது வைத்துள்ள பிரியம் மட்டும் குறையாது. என்னால்தான் அவர்கள் முகத்தைக்கூடப் பார்க்க முடியாது. 'மன்னிக்க முடியாத தவறென்று எதுவும் கிடையாது' என்று அன்னை கூறியிருந்தாலும், நான் செய்தது, என்னை நானே தோலுரித்துக் காட்டினாலும்கூட.....'' தென்னரசு அழவில்லை. அவனின் குரலின் தளர்வு உள்ளத்தை, உண்மையை எடுத்துக்காட்டியது.

''அரசு, நீங்கள் எதைச் சொன்னாலும் நடந்து முடிந்ததைப் பற்றித்தான் சொல்லப்போகின்றீர்களேயொழிய, அன்னையிடம் வந்தபின், உங்களை அன்னை ஏற்றுக்கொண்ட பின், நீங்கள் அன்னையை ஏற்றுக்கொள்வதற்காக எடுக்கும் முயற்சிக்குப் பின் எது நிதர்சனமாகத் தெரிகிறதோ, அதில்தான் உண்மையிருக்கும். அந்த உண்மையை நிச்சயமாக எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அதில் நானும் ஒருத்தி'' என்று பதிலளித்த மல்லிகைக்கு,

''மல்லிகை, எப்படியம்மா உன்னால்....'' என்று ஆரம்பித்த தென்னரசு, ''உங்களால்....'' என்று திருத்தினான்.

''ரோஜாம்மா, உங்களுக்கு நான் நன்றியைச் சொல்ல வேண்டும். எனக்குத் தெரிந்த விதத்தில் சொல்ல நினைக்கிறேன்'', 10 இலட்சத்திற்கான காசோலையை ரோஜாவின் கையில் கொடுத்த தென்னரசு, அவளை நோக்கிக் கை கூப்பினான்.

நன்றியறிதல் என்பது அருமையான உணர்வு. நமக்கு நல்லது செய்தவர்களைக் கருணையுடன் நினைத்து அந்நினைவில் மகிழ்ந்து, மகிழ்ச்சியை வெளிபடுத்தும் விதமே நன்றியறிதல் எனலாம். இந்த நன்றியுணர்வு நல்லெண்ணத்துடன் இணையும்பொழுது உடல்,

உணர்வு, மனம், ஆன்மா என்ற ஜீவனின் பகுதிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து, மூழ்கித் திளைக்கும்பொழுது அபரிமிதமான ஆனந்தம் (சந்தோஷத்தால்) உண்டாகிறது. சைத்திய புருஷன் ஆளுகை மேலோங்கும்பொழுதுதான் நன்றியறிதல் ஒரு க்ஷணம் மேலே வருகிறது. அன்னையின் கருத்துப்படி நன்றியறிதல் அதிகமாக மனிதர்களிடம் காணப்படாத ஒன்று. நெகிழ்ந்து சொல்வது, உணர்வில் சக்தி உள்ளவர்க்குதான் அதிகமுண்டு. வாய் வார்த்தையால், 'thank you' என்ற சொல்கூட நன்றியறிதலின் வெளிப்பாடு என்றாலும், பழக்கத்தின் பேரில் சொல்லும் வார்த்தையாகும்பொழுது அங்கு ஜீவன் இல்லாமல் போய்விடுகிறது. எதையும் ஜீவனுடன் செய்வதுதான் அன்னையை அதிகம் நெருங்கத் துணை செய்யும். சைத்திய புருஷனின் விழிப்பு இருக்கும்பட்சத்தில்தான் இச்செயல்பாடு நடப்பதால், அவ்விழிப்புள்ளவர்கள் மட்டுமே அனுபவிக்கக்கூடிய ஒன்றாக அமைந்துவிடுகிறது.

''இன்றைக்கு 'நன்றியறிதல்' மலர் அதிகமாக வந்தது. வீட்டின் முன்னுள்ள பூக்கூடையில்கூட இம்மலரைத்தான் வைத்தேன்'' என்றார் முகுந்தன்.

''அதற்கு ஆடாதொடை மலர் என்றுதானே பெயர்'' என்று கேட்டாள் மல்லிகை.

''ஆமாம், வேலியில் படர்ந்திருந்து, சற்றே நீல நிறத்தில் குவளை வடிவத்தில் பூத்திருக்கும்''.

தென்னரசு கொடுத்ததைக் கையிலே பிடித்திருந்த ரோஜாவின் கைகள் கனம் தாளாமல் பெரிய பாரத்தைப் பிடித்தாற்போல் தளர்ந்தன. பாரத்தை இறக்கிவைக்கக்கூடிய ஒரே இடம் அன்னையின் திருவடிகள்தானே! கால்கள் துவள, கண்கள் அன்னையின் மேனி முழுவதும் பரவி, ஆனந்தமா, அமைதியா, வானத்தைத் தொட்டுவிட்ட மகிழ்ச்சியா, அன்னையின் அருள் மழையில் நனைந்த உடல் சிலிர்ப்பா, இவைகள் அத்தனையும் கலந்த மௌனத்தின் மௌனமா என்று இல்லாமல், அன்னையைத் தன்னுள் முழுவதுமாக இருத்திக்கொள்ள முடியுமா என்ற தவிப்புடன் கண்கள் இமைக்க மறந்து, ஆனந்தக் கண்ணீர்ப்பூக்கள் உதிர்க்க ஆரம்பித்தன. என்ன தவம் செய்தேன் இந்த அன்னையையறிய. நாயினும் கடையேனை நயந்தளித்த



அன்னையே! கிள்ளிக் கொடுக்காமல் அள்ளி, அள்ளித் தருகின்ற அருளுக்கு 'நான்' என்னைத் தவிர எதைக் காணிக்கை அளிக்க முடியும்? வார்த்தைகள் எண்ணத்திலிருந்து பிறக்காமல், எண்ணமற்றுப் பிறந்த குழந்தையின் மாசு, மருவற்ற பிதற்றலைப் போல ரோஜாவும் அன்னையுடன் ஏதோதோ பேசினாள். பேசினாளா, நினைத்தாளா, உணர்ந்தாளா? எதுவுமே தெரியவில்லை. உட்கார்ந்திருந்தாள் அன்னையின் முன். ஆனால் அவளோ அன்னையின் மடியில்தான் உளமாரத் தவழ்ந்துகொண்டிருந்தாள். கிடைத்தது பணமல்ல, செல்வமல்ல; அன்னை! அவரின் அருட்கொடை. உணர்ந்து, உணர்ந்து உள்ளம் பூரித்தாள். கேட்கவில்லை, நினைக்கவில்லை, ஆனால் அன்னையின் பார்வைக்குள் விழுந்திருக்கிறாள் என்பதை நினைத்தவுடன் தான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று நினைத்தாலும், அது நினைவல்ல. அதற்கு என்ன பெயரிட்டு அழைக்க முடியும்? கண்கள் இமைத்தால்கூட அன்னையை விட்டு ஒரு கணம் விலகி விடுவோமோ என்று இமைக்காமல், பார்வையை அகலவிடாமல் அன்னையை மட்டுமே பார்த்துகொண்டிருந்தாள்.

✡✡✡✡✡

''ரோஜா, இன்றைக்கு பேங்கில் பணத்தைக் கட்டி, வீட்டு லோன் முழுவதையும் சரி செய்துவிட்டேன். ஆனால், எனக்கொன்று புரியவில்லை'' என்று ஆரம்பித்த முகுந்தன்,

''தென்னரசு மல்லிகையால் அன்னைக்கு அறிமுகம் ஆனவர். ஆனால் மல்லிகைக்கு நன்றி செலுத்தாமல், நமக்கு நன்றி செலுத்தி உள்ளாரே, அது ஏன்? என்பதுதானே உங்கள் மனதில் ஓடிக்கொண்டு இருக்கிறது''.

''நீ ரிஷியின் மனதை அடைந்துவிட்டாய் போலிருக்கிறது. அதனால்தான் நான் சொல்லாமலேயே என் மனதை ஊடுருவிப் பார்த்து, அதில் என்ன இருக்கிறது என்பதை அறிந்துகொண்டாய்''.

''நாமிருப்பது எங்கே?''

''வீட்டில்''.

''அன்னையிருப்பது?''

‘‘எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்’’.

‘‘அது சரிதான். ஆனாலும் அவருக்கென நம் வீட்டில் ஒரு இடத்தை ஸ்தாபித்து இருக்கிறோம். எங்கிருந்து வேண்டுமானாலும் தியானம் செய்யலாமென்றாலும்கூட, அந்த அறையில்தான் அமர்ந்து தியானம் செய்கிறோம், இல்லையா?’’ என்று கேட்ட ரோஜாவுக்கு,

‘‘நீ என்ன சொல்ல வருகிறாய் என்று புரியவில்லை, ரோஜா’’.

காலிங்பெல் அடித்தது.

‘‘என்ன மாமா, ஏதாவது குடும்பப் பேச்சா? இல்லை, அப்புறம் வேண்டுமானால் வருகிறேன்’’.

‘‘இப்பேச்சின் கதாநாயகியே நீதான் மல்லிகை’’ என்றான் முகுந்தன்.

‘‘சென்ற வாரம் தென்னரசு கொடுத்ததைப் பற்றித்தானே சொல்கிறீர்கள்?’’

‘‘சரியாகச் சொன்னாய், மல்லிகை. என்னை ரிஷியென்கிறார் உங்கள் மாமா. உன்னை நான் யோகி என்றுதான் சொல்ல வேண்டும்’’ என்ற ரோஜாவிற்கு,

‘‘மாமா, ரோஜாக்காவின் conscious ஜீவிய நிலைக்கு அன்னை கொடுத்தது அது. தென்னரசு ஒரு கருவிதான். அவருக்கு நான் அன்னையைப் பற்றிச் சொன்னாலும், நிதர்சனமாக அவர் அன்னையைப் பார்த்தது உங்கள் வீட்டில்தான். (South Asia) கிழக்காசிய நாடுகளுக்குத் தென்னரசு உயரதிகாரியாகப் பதவி உயர்வு கிடைத்திருப்பது அவர் இங்கு வந்து பிரார்த்தனை செய்ய ஆரம்பித்ததால்தான் என்று உணர்ந்ததால், முதல் மாத சம்பளத்தை ரோஜாக்காவிடம் கொடுத்தார். உடலால் உழைத்துக் கிடைத்ததை, உடல் அன்னையை ஏற்ற/பார்த்த இடத்திற்குக் காணிக்கை ஆக்கி உள்ளார்’’ என்று சொன்ன மல்லிகைக்கு,

‘‘ஜடத்திற்கு உயிரூட்டியது நம்முடைய வீடென்றால், ஆன்மாவிற்கு உயிர் கொடுத்தவள் நீதானே. உன்னுடைய ஆன்மாவிற்கு அவர் என்ன காணிக்கை கொடுத்தார் என்று எனக்குத் தெரியவில்லை’’ என்றாள் ரோஜா.

அப்பொழுதுதான் நுழைந்த தென்னரசு, ‘‘நீங்கள் பேசுவதை



நானும் கேட்டேன் ரோஜாம்மா. மல்லிகைதான் என்னுடைய தெய்வம். என்னுள்ளத்தில் அவர்களை அன்னையாகப் பிரதிஷ்டை செய்துள்ளேன். நான் எதைச் செய்தாலும், பேசினாலும், நினைத்தாலும், உணர்ந்தாலும் அவர்களை நினைத்து ஒவ்வொரு நொடியும் நமஸ்காரம் செய்து வருகிறேன். என்னுடைய ஆத்மார்த்தமான நன்றியை நமஸ்காரத்தின் மூலம் செய்கிறேன். எனக்குச் சரியாகச் சொல்லத் தெரியவில்லை. ஆனால் அன்னையை மல்லிகை மூலமாகத்தான் பார்க்கிறேன். என் நாடி நரம்புகளில் புதியதாக இரத்தத்தை உற்பத்தி செய்து, என்னுடைய அழுக்கு, குற்றம், தவறு ஆகிய எல்லாவற்றையும் திருவுருமாற்றம் அடையச் செய்ய வேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். இந்தக் கோரிக்கையை ‘என் அன்னை’ மூலமாக பிரபஞ்ச அன்னைக்கு மாற்ற வேண்டும் என்பதுதான் இப்பொழுது என்னுடைய பிரார்த்தனை’’, வார்த்தைகள் மேலே எழாமல், கீழே விழுந்துவிடுவோமோ என்ற நிலையில் மல்லிகையைப் பார்த்துக் கைகூப்பினான்.

‘‘தென்னரசு, உணர்ச்சி வேகத்தில் எதையும் பேச வேண்டாம். அன்னையே தன்னை வணங்க வேண்டாம் என்று சொல்லுகின்ற பொழுது, என்னை வணங்குவதாக நீங்கள் சொல்வது.....’’

‘‘மல்லிகை, அவர் உன்னை வணங்கவில்லை. உன்னில் ஐக்கியமான அன்னையைத்தான் ஏற்றுக்கொண்டுள்ளார். சில சமயங்களில், ஏன் பல சமயங்களில் நமக்குச் சரியாக சொல்லத் தெரியாது. தலையாட்டித்தான் பழக்கம். உன்னுடைய ஜீவனில் அன்னையை நீ ஆழ்ந்து ஏற்றுக்கொண்டிருக்கிறாய். உன்னைப் போல் தானும் அன்னையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத்தான் இப்படித் தென்னரசு சொல்கின்றார்’’.

‘‘சரியாகச் சொன்னீர்கள் ரோஜாம்மா! அன்னை என்னை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்பதை இந்த ஒரு வருட காலத்தில் அனுபவபூர்வமாகப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். உள்ளங்கையில் வைத்துத்தான் தாங்குகிறார். அப்படிப்பட்ட அன்னையை நானும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆர்வமாக இருக்கிறது. அதற்கும் நீங்கள்தான் துணை செய்ய வேண்டும்’’ என்று மல்லிகையின் பக்கம் திரும்பி மீண்டும் கைகூப்பினான் தென்னரசு.

‘‘நான் சொல்வதைவிட, ‘புஷ்பாஞ்சலி’ என்ற புத்தகத்தில் ‘அன்னையை ஏற்றுக்கொள்ளுதல் என்றால் என்ன?’ என்று ஸ்ரீ கர்மயோகி அவர்கள் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதை ஒரு முறை படித்துவிடுங்கள். அதன்பின் செயல்முறைப்படுத்தும்பொழுது கேள்விகள் ஏதும் எழுந்தால் நிச்சயமாகக் கேட்கலாம். சொல்லப் போனால், நானும் அன்னையின் குழந்தையாக வேண்டுமென்று முயற்சி செய்துகொண்டு இருக்கிறேன்’’.

‘‘மல்லிகை, சுருக்கமாகச் சொல்லேன். எப்பொழுதோ அக்கட்டுரையை நானும் படித்திருக்கிறேன். ஆனால் எதுவும் இப்பொழுது நினைவிற்கு வரவில்லை’’ என்று கேட்ட முகுந்தனுக்கு, ‘‘ஆர்வத்துடன் படித்துப் படித்ததைச் செயல்படுத்த வேண்டும் என்பவருக்கு எப்பொழுதுமே அது மட்டுமே நினைவிலிருக்கும்’’ என்று பதில் சொன்னாள் ரோஜா.

*தொடரும்.....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜீவன், ஜீவியம், திறன், ஆனந்தம் ஆகியவற்றை ஜீவாத்மா பரமாத்மாவுக்குச் சமர்ப்பணம் செய்வதை, பகவான், ‘சரணாகதி’ என்கிறார். இவை சச்சிதானந்தத்தின் சிருஷ்டி உருவங்கள். சரணாகதிக்குரிய ஜீவாத்மா இவற்றிலிருந்து விலகி நிற்கிறதெனில், சரணாகதியை ஏற்கும் பிரம்மம் சச்சிதானந்தத்திலிருந்து விலகி நிற்கிறது.

*விலகிய நிலை சிருஷ்டி.*





**P.87 This bizarre kingdom passed into his charge.**
**இக்குழப்பமான ராஜ்யம் அவன் உரிமையின் வாரிசாயிற்று.**

- ✡ வளரும் பிரியம் விலகும் நடைமுறை.
- ✡ அவளுடைமையும், உரிமையும், சக்தியும், தர்மமும் பிரம்மாண்டம் ஆனவை.
- ✡ தயக்கமான அர்ப்பணம் தன்னை மீறிய சந்தோஷம்.
- ✡ தன்னையே கொடுத்துப் பூரித்தாள். அடுத்தவர் பயன் அவள் இலட்சியம்.
- ✡ ஆழ்ந்த முறைகள் தடம் மாறும். அந்நிலை அவளுக்கில்லை.
- ✡ சிருஷ்டிப் பயனைத் தேடிப் பிடித்தாள்.
- ✡ தான் சேவை செய்த கொடுமைக்கு எதிரானாள்.
- ✡ அவள் கோபாக்கினியின் மெஷின், சூட்சும அழிவுக்கருவி.
- ✡ எந்த வகையிலும் செயல்படும் அவள் சக்தி ஆபத்தான குணமாக வெளிவரும்.
- ✡ ஆத்மசேவைக்கு அவள் சரணடைந்தாள்.
- ✡ ஆத்ம உறுதிக்கு அவள் அடங்கினாள்.
- ✡ அவள் எதேச்சாதிகாரம், அதன் தலைவனுக்குக் கட்டுப்பட்டது.
- ✡ பிரம்மத்தின் கோட்டையுள் அது தாக்கப்பட்டு, ஆச்சரிய அதிர்ச்சி எழுந்தது.
- ✡ அரசனாக எழுந்து அவளை ஆதிக்கம் செய்கிறான்.
- ✡ அடிமை கொத்தடிமையாகப் பூரணத்தில் பூர்த்தி பெறுகிறான்.
- ✡ தோல்வியின் பூரிப்பு அவளைக் காந்தமாக இழுத்தது.
- ✡ பூட்டிக் கிடந்த பொக்கிஷமான விவேகம் கொள்ளை போயிற்று.
- ✡ அகண்டத்தின் கண்டம் புதிரென எழும்பியது.

- ✡ கண்ணுக்குத் தெரியாத சக்தி ராஜ்யத்தின் எல்லையாகும்.
- ✡ புவியைக் கடந்த புதுமையின் வாயிலில் துவாரபாலகன்.
- ✡ சொர்க்கத்தின் பிரவாகம் அவள் கால்வாயால் பாய்ந்தது.
- ✡ ஞானதிருஷ்டியின் இராஜப்பாதையைக் கடந்து சென்றான்.
- ✡ பளபளக்கும் புதுப் புது விஷயங்களைக் காணும் நெடுஞ்சாலை.
- ✡ அது அறியமுடியாத உலகின் அற்புதம்.
- ✡ அதன்பின் சொல்லுக்கு அகப்படாத தரிசனம் நின்றது.
- ✡ அவளுடைய ஆட்சி புதிரான புத்துணர்ச்சியாலானது.
- ✡ அவள் காலடியில் சிங்கநாதம் மண்டியிட்டது.
- ✡ எதிர்காலம் கதவின் பின்னே கண்மூடி உறக்கத்திலாழ்ந்துளது.
- ✡ ஆத்மாவின் அடிச்சுவடுகளில் நரகத்தின் பாதாளம் வாயைத் திறக்கிறது.
- ✡ ஆண்டவன் உறையும் மலைச்சிகரம் அழைக்கிறது.
- ✡ முடிவற்ற முயற்சி உயர்ந்த எண்ணங்களைப் போராடிப் பெறுகிறது.
- ✡ வீரனின் தீரம் அலுக்காமல் அழைப்பின் குரலைக் கேட்கிறது.
- ✡ ஏராளமான குரல் காதில் இனிமையாக ஒலிக்கின்றன.
- ✡ கோடிக்கணக்கான பேர் கடந்து சென்று மறந்தனர்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

நீண்ட - நெடிய - கடினமான பாதையாக நாம் அறிவதே சுருக்கமான வழி.

***நீண்ட வழியே சுருக்கமான வழி.***



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**90. அளவுக்குமீறிச் சாப்பிடாதே.**

Self-control தன்னடக்கம் ஒருவனை மனிதனாக்கும்.

அது இல்லாதவன் அதிகமாகப் பேசுவான், அதிகமாகச் சாப்பிடுவான், அதிகச் சோம்பேறித்தனமாக இருப்பான். எந்த விஷயத்தில் கட்டுப்பாடு இல்லை என்றாலும் அது lack of control நிர்ணயமற்றவராகும். ஆனால் ஒவ்வொரு விஷயத்திற்கும் வரும் தவறானபலன் அதன் முத்திரையைத் தாங்கிவரும். 22 தோசை சாப்பிடுவது பசிக்கன்று; ருசிக்கும் அல்ல; வயிறு கனப்பது தரும் சந்தோஷத்திற்காக. பசி அடங்கியபிறகு ருசிக்குச் சாப்பிடுவது சரியில்லை; ஆனால் சாப்பிடுவதுண்டு; அது புலன் உணர்வு (for the delight of senses). வயிறு கனப்பது ருசிக்கிறது, திருப்தியாக இருக்கிறதுஎனில், அது உடல்உணர்வு. மனிதன் உணர்வுமற்ற மரக்கட்டை (physical hulk) என்றாகும். அப்படிச் சாப்பிடுபவனுக்குப் பொதுவாக அதிர்ஷ்டம் இருந்தால் நிலைமை மாறி சாப்பிட முடியாமற்போகும். அது நல்ல திருப்பம். அவன் துர்அதிர்ஷ்டசாலியானால் ஆயுள் முழுவதும் வசதியாக, அளவுகடந்து சாப்பிடும் நிலைமை ஏற்படும். மனிதன் இதை துர்அதிர்ஷ்டம்என அறியாமல் விரும்புவான். சாப்பிட முடியாத நிலை பல வகைகளில் வரும்:

- ❀ சாப்பிட முடியாத ஒரு வியாதி வரும்.
- ❀ சாப்பாடு போடாத மனைவி வருவாள்.
- ❀ அதிகமாகச் சாப்பிட்டால் கேலி செய்யும் சந்தர்ப்பம் நிலையாக வரும்.
- ❀ பிடித்தமான சாப்பாடு கிடைக்காது.

  எப்படி வந்தாலும் இது ஆத்மாவுக்குரிய அதிர்ஷ்டம்.
- ❀ அளவு மீறிச் சாப்பிடுவது வாய்விட்டுப் படிப்பதைப்போல அநாகரீகமான செயல். வாய்விட்டுப் படிப்பவன் புரியாது

மனப்பாடம் செய்வான்; மடமை வளரும். அளவுமீறிச் சாப்பிட்டால் உடல் பெருக்கும், உணர்ச்சி மந்தமாகும், ஆத்மா இருளடையும், பர்சனாலிட்டி (coarse) மட்டமாகும்.

- ❀ அளவுக்குமீறிச் சாப்பிட்டுப் பெருத்தால் (obese) அதற்குரிய வியாதிகள் வரும்.
- ❀ அளவுக்குமீறிச் சாப்பிடுபவர் பொதுவாக மந்தபுத்தியுடையவராக இருப்பார்கள்.
- ❀ சைத்திய புருஷனை அவர்கள் நினைக்கவே முடியாது.
- ❀ ஆத்மாவே அவர்கட்கு நினைவு வாராது.

  இடைவிடாமல் சாப்பாடு, குழம்பு, இனிப்பு, பாயசம், வடை, அப்பளம், பிரியாணி மனத்தை நிரப்பும்.
- ❀ அவர்கள் இரண்டுகால் பிராணியாக இருப்பார்களேதவிர மனிதகுலத்து உறுப்பினர்களாக இருக்கமாட்டார்கள்.
- ❀ 'பெருந்தீனி' என்பது வழக்கு.

### 91. பொங்கிவரும் சந்தோஷம் இயல்பாக வேண்டும்.

சாதாரண மனிதன் நிலை சந்தோஷமில்லாத நிலை.

பலருக்கு விரக்தியிருக்கும். சிலருக்கு எதுவுமிருக்காது.

சந்தோஷத்தை உற்பத்திசெய்ய முயன்றால் விரக்தியோ, எரிச்சலோ வளரும்.

எரிச்சல் உள்ளவர் எரிச்சலைப் போக்க ஆயுள் போதாது; சமர்ப்பணம் செய்யும்.

Supreme ecstasy உச்சக்கட்டப் பூரிப்பு வந்தால் அது 3 நிமிஷமிருக்கும். அத்துடன் மீதி நாள் முழுவதும் அதற்கெதிரான வலி, எரிச்சல், விரக்தி இருக்கும் என்கிறார் அன்னை. அந்த நிலையிலிருந்து தானே சந்தோஷம் உள்ளிருந்து எழ நாம் செய்யக்கூடியது ஒன்றில்லை. அது தானே வர வேண்டும். 40 வயதிற்குமேல் நாய்க்குணம் என்பது மனிதகுலத்தின் நீண்டநாள் அனுபவம்.

அன்னை, சமர்ப்பணம், அருள், சரணாகதி, சேவை, பேரருள்,



காணிக்கை ஆகியவையுள்ள அன்பர் தாம் செய்யக்கூடியவற்றை எல்லாம் செய்யும் முன் பொதுவாக மனம் சந்தோஷமாக இருப்பதைக் காணலாம். இது அன்பர்க்கு மட்டும் உரிய அரிய வாய்ப்பு. அன்னையை அறிவதால் இதைப் பயிற்சியாலும், பக்குவத்தாலும், பவித்திரத்தாலும் பொங்கிவரும் சந்தோஷமாக மாற்றலாம்.

ஒரு சிலருக்குச் சந்தோஷம் பொங்கிவந்தால் அவருலகம் முழுவதும் வருத்தத்திலாழ்ந்துவிடும். அது அவர் இராசி, அவர் கொண்ட இலட்சியம். எவரும் சந்தோஷப்படக்கூடாது என்ற கொள்கையுடையவர்.

வேறு சிலருக்குச் சந்தோஷம் பொங்கிவந்தால் அவருடன் உள்ள அனைவரும் அதையே உணர்வர்.

நாமுள்ள நிலைமைக்கும் சந்தோஷம் பொங்கிவரும் நிலைக்கும் உள்ள தூரம் சாதாரண மனிதனுக்கும், ஜனாதிபதிக்கும் உள்ள தூரம்.

சமர்ப்பணம், அதுவும் தொடர்ந்த சமர்ப்பணம், அதையும் செய்யும்.

அது பலித்தபின் அது இயல்பாக வேண்டும்என்பது அடுத்த உயர்ந்த கட்டம்.

ஒருவர் ஜனாதிபதியாகலாம். அவரே வாழ்நாள் முழுவதும் ஜனாதிபதியாக இருக்க முடியுமா?

அதுபோன்ற சாதனை சந்தோஷம் இயல்பாக இருக்க வேண்டும் என்பது.

நம் ஜீவனின் ஆழம் இருண்டது. அதற்குச் சந்தோஷம் ஒத்துவாராது.

நமக்குச் சந்தோஷம் எழுந்தால், ஆழம் எதிர்க்கும், எதிரானவற்றைச் செய்யும்.

இயல்பாகச் சந்தோஷமாக இருக்க இயல்பாக ஆழ்ந்தமனம் நல்லதாக, ஒளிமயமானதாக இருக்க வேண்டும்.

அது திருவுருமாற்றம்.

நாம் அதை நோக்கிப் போகலாம்.

அதை இலட்சியமாகக் கொள்ளலாம்.

அவ்வளவு உயர்ந்த நிலையை இலட்சியமாகப் பெறுவதும் பாக்கியம்.

இலட்சியமாக மனம் ஏற்று, அதில் சிறு துளி பலிப்பதும் பெரியது.

சாதாரணக் குடிமகன் மத்திய மந்திரி சபையில் ஒரு கூட்டத்திற்கு விசேஷ அழைப்பாளராக வந்தது போன்ற நிலை அது.

## 92. கோள் சொல்லக்கூடாது.

ஆபீஸ் வாழ்வில், அரசியல் தலைமையில், பெரிய குடும்பத்தில் கோள் சொல்வது பரம்பரையான பழக்கம்.

தலைவர் கோள் சொல்வதைக் கேட்டுக்கொள்ளமாட்டார் என்பது அரிது. அது சமயம் அவருக்குச் செய்தியைத் திரித்து அனுப்ப முயலும் திறமை மனிதத் திறமைகளில் (negative) பெரியது.

கீழிருந்து செய்தி வாராமல் பெரிய நிர்வாகம் செய்ய முடியாது.

அது கோள் சொல்வதை வளர்க்கும்.

இந்த இரண்டு நிலைமைகளையும் பாஸிட்டிவாகச் சமாளிக்க, நிர்வாகத்தின் பெரிய நேர்மையான தலைமைக்குப் பொருத்தமான வழிகள் உள்ளன.

அன்னையை மட்டும் நம்பினால், கோள் நம்மிடம் வாராது.

சிறுவர் கோள்என அறியாமல் செய்திகளைக் கூறுவர். வயதான பின்னும் விதரணையற்றவர் எதைச் சொல்வதுஎனத் தெரியாமற் பேசுவர்.

கோள் சொல்வதில் ஆதாயம் தேடுபவர், கோள் சொல்வதில் பிரியமுள்ளவர், நான் இங்கு எடுத்துக்கொள்வது.

நாம் சொல்லியது நமக்கே அன்னையிடம் உடனடியாகப் பலிக்கும் என்பதை இவர்கள் பார்த்தால் பயந்துவிடுவார்கள். அது தெரியாதது மடமை. கோள் என்பது இல்லாத சௌகர்யத்தைப் பொய் சொல்லிப் பெற முயலும் பழக்கம் - அது தவறு, அல்பம், அசிங்கம் என உணர்வது அன்பராவது. "இந்தச் செய்தி மேலே போகக்கூடாது" என்று நினைப்பவர் ஆபீசில் வேலைக்கு லாயக்கற்றவர்; குடும்பம் அவருக்கு ஒத்து வாராது. அது அநாகரீகம்என்று அறியாதவர் மனம் மாற வேண்டும்.

இதையே தொழிலாக உள்ளவர், செய்தி சேகரம் செய்பவர் மனநிலை கூலிக்காரன் மனநிலைக்குத் தாழ்ந்தது.



அத்தனை பேரும் அப்படித்தானேயிருக்கிறார்கள்என நினைப்பது நல்லதன்று. அதிலும் சற்று யோசனை செய்தால், நாம் அவர்களைவிட மட்டமாக இருப்போம்.

- ❀ கோள் சொல்ல முடியாதவன் மனிதன்.
- ❀ பிறர் சொல்லும் கோளைக் கேட்க மறுப்பவன் உத்தமன்.
- ❀ எவரும் அதுபோல் மாறமுடியும்.
- ❀ மாற விரும்புபவர்க்கு அன்னை அமுதசுரபி.
- ❀ மாறவேண்டாம்என நினைப்பவரிடம் நமக்குப் பேச்சில்லை.
- ❀ நமக்கு நாம் மட்டும் பிரச்சினை, பிறரல்லர்.
- ❀ குறைந்தபட்சம் கோள் எப்படி நம்மைப் பாதிக்கிறதுஎன அறிந்து, அத்தவற்றிலிருந்து விலகுவது முறை.
- ❀ கோள் சொல்பவருக்கு அடையாளம்: பிறர் கோள் சொல்வதாக நினைப்பார்கள், பேசுவார்கள்.

## 93. காணிக்கை

காணிக்கை நம் பரம்பரையில் சிகரமானது.

நடைமுறையில் எதுவும் முடியாதவர்க்குரிய எளிய முறை.

அரெஸ்ட் வாரண்ட்டிலிருந்து தப்பியபின் காணிக்கையை "நீங்களே கொடுங்கள்"எனத் தப்ப உதவியவருக்குச் சொல்லியது ஒரு பெரிய ஆத்மா.

$10 காணிக்கை கொடுக்க மறுத்து $30 மில்லியன், ரூ.800 கோடி திட்டத்தை இழந்தவர் ஓர் அமெரிக்கர்.

பலன் வரும்வரை காணிக்கையின் அவசியத்தைப் பேசியவர், பலன் வந்தபின் "அவ்வளவு பெரிய மனம் எனக்கில்லை" என்றார்.

Water Diviner போர் முதலியாராவது வீராப்பாகப் பேசியபின் நடைமுறையைக் கண்டு இரண்டு மாத வருமானத்தைக் காணிக்கையாகக் கொடுத்து முழுப்பலன் பெற்றார். சாதுர்யமாகக் காணிக்கையிலிருந்து தப்ப முயல்வது அன்னை வேண்டாம் என்பது. அன்னையின் அருள் எவர்மூலமாக வருகிறதோ அவரை மனத்திலிருந்தும், செயலிலிருந்தும், தம் வாழ்விலிருந்தும் விலக்க

எண்ணிக் காணிக்கையைப் பெரிய அளவில் வேறொருவர் மூலம் கொடுக்க முயன்ற அன்பர் காணிக்கை, வீட்டில் பூகம்பம் எழுப்புவதைக் கண்டார். உரியவரை விலக்கினால் அதற்கெதிரான hostile force தீயசக்தி வரும் என்பது சட்டம்; ஒருவருக்குப் பேய் மனைவியாக வந்தது; அடுத்தவருக்கு அன்னைமூலம் வந்த அத்தனையும் அழிந்தது; உயிரையும் மாய்த்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

- ❀ அன்னையை அருளாக நினைத்தால் பேரருளாவார்.
- ❀ அன்னையை ஆதாயமாக நினைத்தால் ஆதாயம் வரும்; அன்னை விலகுவார். முடிவில் ஆதாயம் விலகும்; முடிவாக ஆதாயம் நஷ்டமாகும்.
- ❀ அன்னையின் இரகஸ்யம் மனத்தின் உண்மையிலும், அடக்கத்திலும் இருக்கிறது.
- ❀ அடுத்தவரை அண்டி வாழவும் தகுதியற்றவர், அவர்தம் ஆதிக்கத்திற்குட்பட வேண்டும் என்ற கனவு கண்டால், கனவு தலைகீழே தவறாது பலிக்கும்.
- ❀ காணிக்கை எளிய முறை; பவித்ரமானது.
- ❀ பவித்ரமான மனத்துடன் காணிக்கை செலுத்துவது சரி.
- ❀ குள்ளநரி உள்ளம் பள்ளம் பறிக்கும்.
- ❀ அன்னை வாழ்வுமூலம் செயல்படுவார்.
- ❀ அன்னையிடம் நம் தில்லுமுல்லுகளைக் காண்பித்தால் அன்னை நம்மை வாழ்விடம் ஒப்படைத்துவிடுவார்.
- ❀ வாழ்வு தரும் தண்டனை வாள்வீச்சு போலாகும்.
- ❀ அன்னை தம் அருளைப் பேரருளாக்கி அவர் பிரசாதத்தை நமக்கு அளிக்கும்பொழுது அவர் அஞ்ஞானத்திற்கு அளிக்கும் காணிக்கை விளங்கும். அது அதிஅற்புதம்.

***தொடரும்....***

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Puducherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Puducherry-11 on behalf of The Mother's Service Society, Puducherry-11.
Editor: N. Asokan

## டேபிள் கிளாத்

ஒரு பாதிரியார் பழைய சர்ச்சைப் புதுப்பித்தார். பெருமழை வந்து அவர் செய்த வேலைகளைச் சிதைத்தது. மனம் கசந்து விழாவுக்கு முன் ஓரளவு செப்பனிட முடிவு செய்து, ஒரு பழைய பொருள்கள் விற்கும் கடையில் டேபிள் கிளாத் ஒன்று வாங்கி வந்து ரிப்பேரான இடங்களை மறைக்கும்படிப் போட வந்தார். பனி பெய்கிறது. சர்ச்க்கு முன்னால் ஒரு பெண்மணி பனியில் நிற்கிறார். அவரை உள்ளே அழைத்து வந்து உட்கார வைத்துவிட்டு டேபிள் கிளாத்தை சுவற்றில் பொருத்தினார். அப்பெண் டேபிள் கிளாத் அடியில் initials EBLC இருக்கிறதா என்றாள். அது இருந்தது. 35 வருஷங்கட்கு முன் ஹிட்லருக்கு பயந்து நாட்டை விட்டுத் தம்பதிகள் ஓடுமுன் வீட்டிலுள்ள பொருள்களை எல்லாம் விற்றனர். அதில் ஒன்று இந்த டேபிள் கிளாத். அப்பெண் இவ்விஷயத்தைப் பாதிரியாரிடம் கூறினாள். அவர் நெகிழ்ந்து அந்த டேபிள் கிளாத்தை அப்பெண்ணுக்குக் கொடுக்க முன்வந்தார். பெண் மறுத்துவிட்டாள். பாதிரியாருக்கு ஏதாவது அவளுக்குச் செய்யத் தோன்றியது. அவள் வீடு 20 மைலுக்கு அப்பால் என்றறிந்து தம் காரில் அவளை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இரண்டு நாள் கழித்து விழா இனிதே நடந்தேறியது. அனைவரும் கலைந்தனர். ஒருவர் மட்டும் போகவில்லை. பாதிரியாரை நோக்கி,

“எங்கே இந்த டேபிள் கிளாத்தை வாங்கினீர்கள்?

இது 35 ஆண்டுகட்கு முன் நான் விற்ற பொருள்” என்றார்.

பாதிரியார் “என்னுடன் வாருங்கள்” என அவரைத் தம் காரில் அப்பெண் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். 35 ஆண்டு பிரிவுக்குப் பின் கணவனும், மனைவியும் சேர்ந்தனர்.

**பொருள்கட்கு ஜீவனுண்டு.**

கணவனும், மனைவியும் அந்த டேபிள் கிளாத்தைப் பிரியமாகப் பயன்படுத்தினர். அவர்கள் பிரிந்திருப்பதை டேபிள் கிளாத் சேர்க்க முனைந்து செயல்பட்டு வெற்றிகரமாகச் சேர்த்து விட்டது.

**மனிதன் மறக்கலாம்; பொருள்கள் மறப்பதில்லை.**

❀❀❀

## வைர மோதிரம்

✡ ஸ்வீடன் ஓட்டலில் 12 வயதுப் பெண் நீச்சல் குளத்தில் குளித்த பொழுது தரையில் ஒரு மோதிரம் இருப்பதைக் கண்டு, அதை எடுத்தாள்.

✡ தான் கண்டெடுத்ததைத் தான் பெற வேண்டும் என அவளுக்குத் தோன்றவில்லை.

✡ மோதிரத்திற்குச் சொந்தக்காரரைத் தேடிப் பிடிக்கும் வயதில்லை.

✡ ஓட்டல் மேனேஜரிடம் மோதிரத்தைக் கொடுத்தாள்.

✡ தானே எடுத்துக்கொள்ளாமல், பெண் அதை அவரிடம் தருவது மானேஜருக்கு வியப்பாக இருந்தது.

✡ மோதிரம் வைர மோதிரம்.

✡ பெண் டிரஸ் செய்துகொண்டு சாப்பிட உட்கார்ந்தாள்.

✡ சாப்பாட்டின் பகுதியாக ஒரு ஆப்பிள் இருந்தது.

✡ ஆப்பிளை வெட்டினாள்.

✡ அதனுள் ஒரு வைர மோதிரம் இருந்தது.

✡ நாம் இதை Life Response என்று கூறுகிறோம்.

✡ Life அவளுக்கு ஒரு வைர மோதிரம் தர முடிவு செய்து, முதல் மோதிரத்தை அவள் கொடுத்துவிட்ட பின்னும் வற்புறுத்தி அடுத்ததைக் கொடுக்கிறது.

❀❀❀

August 2008 Jiviyam 14 Malar 4
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/06-08
Price: Rs.5/- WPP No.45/06-08

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

| | |
|---|---|
| **பரம்பொருள் III** | ரூ.200/- |
| **எங்கள் குடும்பம்** (பாகம் 2) | ரூ.250/- |
| **உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** | ரூ.100/- |
| **யோக வாழ்க்கை விளக்கம் IV** | ரூ.150/- |

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

| | |
|---|---|
| **லைப் டிவைன் விரிவுரைகள்** | ரூ.100/- |

*தமிழாக்கம்:* என். அசோகன்

| | |
|---|---|
| **SATYA JYOTHI** | ரூ.200/- |

**(CONCISE TRUISMS)**

**N.Asokan**

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

**பாண்டியில்**
**மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,**
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு, புதுச்சேரி
- 605 011.
✆: (0413) 2212443, 2214231

**சென்னையில்**
**மாம்பலம் தியான மையம்,**
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை-600 035.
✆: (044)-24347191